# SANTA CLARA கவுண்ட்டி
# தேர்தல் நிர்வாகத் திட்டம்

# பொருளடக்கம்

அறிமுகம் .... 4
பகுதி 1 – தேர்தல் நிர்வாகத் திட்டம் .... 7
அஞ்சல்-மூலம்-வாக்களிப்பு (VBM) செயல்முறை .... 7
அஞ்சல் மூலமாக அணுகக்கூடிய வாக்களிப்பு .... 8
வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸ் இடங்கள் .... 10
வாக்கு மையங்கள் .... 13
வாக்காளர் பதிவு .... 16
மாற்று வாக்குச்சீட்டுகள் .... 16
தற்காலிக வாக்களிப்பு .... 16
வாக்கு மையங்களில் அணுகக்கூடிய வாக்களிப்பு .... 17
மொழி உதவி .... 19
வாக்கு மையத்தை வைக்கும் இடத்தை கருதுதல் .... 20
தேர்தல் அதிகாரிகளின் கூட்டமைவு .... 21
மின்னணு வாக்கெடுப்பு புத்தகங்கள் (ஈ-போல்புக்குகள்) .... 22
அவுட்ரீச் .... 23
பொது ஆலோசனைகள் .... 23
தேர்தல் நிர்வாகத் திட்டம் (EAP) மேம்பாட்டு காலக்கெடு .... 25
பொது அறிவிப்புகள் .... 25
மொழி அணுகல் மற்றும் வாக்களிப்பு அணுகல் ஆலோசனைக் கமிட்டிகள் .... 26
பகுதி 2 - வாக்காளர் கல்வி மற்றும் அவுட்ரீச் திட்டம் .... 28
பிரிவு 1: வாக்காளர் தொடர்பு - பொது .... 28
ஊடகத்தின் பயன்பாடு .... 28
சமூக இருப்பு திட்டம் மற்றும் வாக்காளர் கல்வி பொருட்கள் .... 30
நேரடி அஞ்சல்கள் .... 31
ROV வலைத்தளத்தில் வாக்காளர் கல்வி வளங்கள் .... 32
பிரிவு 2: வாக்காளர் தொடர்பு - மொழி சிறுபான்மை சமூகங்கள் .... 32
மொழி சிறுபான்மை சமூகங்களை அடையாளம் காணுதல் .... 32
சேவை செய்யப்பட வேண்டிய மொழி சிறுபான்மை சமூகங்கள் .... 33
மொழி சிறுபான்மை சமூகங்களுக்கான வாக்காளர் கல்வி கருத்தரங்கு .... 33
மொழி சிறுபான்மை சமூகங்களை குறிவைக்க ஊடகங்களின் பயன்பாடு .... 34
தேர்தல் அதிகாரிகள் .... 35
பிரிவு 3: வாக்காளர் தொடர்பு - மாற்றுத்திறனாளிகளாக உள்ள வாக்காளர்கள் .... 36

மாற்றுத்திறனாளிகளாக உள்ள வாக்காளர்களின் தேவைகளை அடையாளம் காண பயன்படுத்தப்படும் முறைகள் ..... 36
மாற்றுத்திறனாளிகளின் சமூகத்தை சென்றடைதல் ..... 37
மாற்றுத்திறனாளிகளாக உள்ள வாக்காளர்களுக்கான சேவைகள் ..... 37
மாற்றுத்திறனாளி சமூகத்திற்கான வாக்காளர் கல்வி கருத்தரங்கு ..... 38
மாற்றுத்திறனாளிகளாக உள்ள வாக்காளர்களுக்கு கல்வி கற்பிப்பதில் பயன்படுத்தப்படும் வரைவு பொருட்கள் ..... 38
தேர்தல் அதிகாரிகள் ..... 38
பிரிவு 4: வாக்கு மையம் மற்றும் வாக்குச்சீட்டை போடும் இடத்தின் தகவல் ..... 39
வாக்கு மைய இடங்கள் ..... 39
வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸ் இடங்கள் ..... 40
தடுப்பு நடவடிக்கைகள் ..... 41
தற்செயல் திட்டம் ..... 42
பிரிவு 5: வாக்கு மையத்தில் வாக்குச்சீட்டு பாதுகாப்பு மற்றும் தனிமை திட்டங்கள் ..... 42
வாக்கு மைய வடிவமைப்பு மற்றும் தளவமைப்பு ..... 42
வாக்களிப்பில் பாதுகாப்பு ..... 43
பிரிவு 6 - வரவு செலவு திட்டம் ..... 44

# அறிமுகம்

அங்கீகாரம் பெற்ற கவுண்ட்டிகள் தங்கள் மேற்பார்வையாளர்களின் வாரியம் அளிக்கும் ஒப்புதலின் பேரில் எந்தவொரு தேர்தலையும் சில குறிப்பிட்ட தேவைகளுடன் அஞ்சல் மூலம் நடத்த அனுமதி அளிக்கும் வகையில் California வாக்காளர் தேர்வுச் சட்டம் (VCA), அல்லது செனேட் மசோதா (SB) 450 (Allen, D-26) செப்டம்பர் 29, 2016 அன்று California தேர்தல் விதியுடன் பிரிவு 4005 சேர்க்கப்பட்டு சட்டமாக கையெழுத்தானது. VCA இன் கீழ், தேர்தலுக்கு 29 நாட்களுக்கு முன்னதாக தொடங்கி, அனைத்து வாக்காளர்களுக்கும் அஞ்சல் மூலம் ஒரு வாக்குச்சீட்டு அனுப்பப்படும். மேலும் ஒவ்வொரு கவுண்ட்டியும் அதன் எந்தவொரு வாக்காளரும் வாக்களிக்கும் வகையில் பொதுமக்கள் உள்ளீட்டுடன் கூடிய கவுண்ட்டி முழுவதுமான எண்ணற்ற வாக்குச்சீட்டை போடும் மையங்களையும் வாக்கு மையங்களையும் நிறுவ வேண்டும். வாக்களிக்கும் விருப்பங்களை விரிவுபடுத்துவதன் மூலம் வாக்காளர் பங்களிப்பு மற்றும் வாக்காளர் ஈடுபாட்டை அதிகரிக்கும் வகையில் தேர்தல்கள் எவ்வாறு நடத்தப்படலாம் என்பதை மாற்றுவதற்காக வடிவமைக்கப்பட்ட பல்வேறு தேர்தல் சீர்திருத்தங்களில் இந்த சட்டமும் ஒன்று.

VCA க்கு முன்பாக, பாரம்பரிய வாக்குப்பதிவு இட மாதிரியின் அடிப்படையில் தேர்தல்கள் நடத்தப்பட்டன. இது அஞ்சல்-மூலம் வாக்களிப்பு மற்றும் வாக்குப்பதிவு இடத்தின் நிர்வாகம் ஆகியவற்றின் ஒருங்கிணைந்த மாதிரியாக இருந்தது. தேர்தல் குறியீடு §12261(a) வெவ்வேறு இட அமைப்புடனும் தொகுதிக்கு அதிகபட்சமாக 1,000 வாக்காளர்களுடனும் கூடிய வாக்குச்சாவடி தொகுதிகளை நிறுவ வேண்டுமென கவுண்ட்டி தேர்தல் அதிகாரிகளை கட்டாயப்படுத்தியது (இது வாக்குச்சாவடி தொகுதி வாரியாக தேர்தல் முடிவுகளை அறிவிக்க கவுண்ட்டியையும் மாநிலத்தையும் அனுமதிக்கும் தரவுகளாகவும் செயல்படுகிறது) சரீர குறைபாடுகள் உள்ளவர்கள் மட்டுமே நிரந்தர அஞ்சல்-மூலம்-வாக்களிக்கும் வாக்காளர்கள் பட்டியலில் இடம்பெற முடியும்; அஞ்சல்-மூலம்-வாக்களிக்க விரும்பும் மற்றவர்கள் ஒவ்வொரு தேர்தலுக்கும் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும். அஞ்சல் மூலம் வாக்களிக்காதவர் அவருக்கு என்று நியமிக்கப்பட்ட வாக்குச்சாவடியில் அதற்குரிய வாக்குப் பெட்டியிலும் வாக்குச்சீட்டுப் பிரிவிலும் வாக்கை அளிக்க வேண்டும்.

பின்னர், 2002 ம் ஆண்டில், California தேர்தல் விதி அஞ்சல்-மூலம்-வாக்களிக்கும் முறையை விரிவாக்கி, யார் வேண்டுமானாலும் நிரந்தர அஞ்சல்-மூலம்-வாக்களிக்கும் வாக்காளராக மாறுவதற்கு அனுமதி அளித்தது. இந்த விரிவாக்கம் வாக்காளர் நடத்தையில் ஒரு மாற்றத்தை உருவாக்கியது. இதன் காரணமாக Santa Clara கவுண்ட்டியில் பெரும்பான்மையான வாக்காளர்கள் தங்களுக்கு ஒதுக்கப்பட்ட வாக்குச்சாவடிக்கு நேரில் சென்று வாக்களிப்பதை காட்டிலும் அஞ்சல்-மூலம்-வாக்களிக்கவே அனுமதி கோருகின்றனர். அஞ்சல்-மூலம்-வாக்களிக்கும் நிரந்தர வாக்காளர்களாக தங்களை பதிவு செய்தவர்களுக்கு தேர்தலுக்கு தோராயமாக 29 நாட்களுக்கு முன்பாக வாக்குச்சீட்டு அஞ்சல் மூலமாக அனுப்பிவைக்கப்படும், மற்றும் அந்த வாக்குச்சீட்டை ஒரு வாக்குப்பதிவு இடத்திலோ, வாக்குச்சீட்டை போடும் இடத்திலோ அல்லது அஞ்சல் மூலமாகவோ திரும்ப அனுப்பி வைக்க தேர்தல் தேதியன்று தேர்தல் முடியும் வரை அவர்களுக்கு அவகாசம் கிடைக்கிறது.

VCA அமலாக்கத்துடன், புதிய வாக்கு மைய மாதிரியின் கீழ் தேர்தல்கள் நடத்தப்படும். புதிய மாதிரியுடன், பதிவுசெய்யப்பட்ட *ஒவ்வொரு* வாக்காளரும் அஞ்சல்-மூலம்-வாக்களிக்கும் வாக்காளராக இருந்து திட்டமிடப்பட்ட தேர்தலுக்கு 29 நாட்களுக்கு முன்பாக தொடங்கும் அஞ்சல்-மூலம்-வாக்களிக்கும் அதிகாரப்பூர்வ வாக்குச்சீட்டை அஞ்சல் மூலம் பெறுவார்கள். வாக்காளர்கள் தங்கள் வாக்குச்சீட்டை பின்வரும் மூன்று வழிகளில் ஏதேனும் ஒன்றின் மூலம் திரும்ப அனுப்ப முடியும்: அஞ்சல் மூலம் (அஞ்சல் கட்டணம் செலுத்தப்பட்டது), வாக்குச்சீட்டை போடும் இடத்தில் அல்லது கவுண்டடியிலுள்ள ஏதேனும் வாக்கு மையத்தில். வாக்காளர்கள் தங்கள் அஞ்சல்-மூலம்-வாக்களிக்கும் வாக்குச்சீட்டை திருப்பி அனுப்பாமல், அதற்குப் பதிலாக வாக்காளர் பதிவாளர் அலுவலகத்தில் (ROV) அல்லது Santa Clara கவுண்ட்டியில் உள்ள *ஏதேனும்* வாக்கு மையத்தில் நேரில் வாக்களிக்க தேவையான ஒரு வாக்குச்சீட்டையும் பெறலாம்.

தற்போதைய நிரந்தர அஞ்சல்-மூலம்-வாக்களிக்கும் வாக்காளர்களுக்கான வாக்கு மைய மாதிரி அந்தளவிற்கு மாற்றம் பெறாது. இது முக்கியமாக தேர்தல் தேதியன்று தங்கள் வாக்கை செலுத்த தங்களுக்கென ஒதுக்கப்பட்ட வாக்குப்பதிவு இடத்திற்கு வழக்கமாக வருகை தரும் வாக்காளர்களுக்கான நடைமுறைகளை மாற்றுகிறது. இப்போது, வாக்காளர்களுக்கு வாக்களிக்க ஒரே ஒரு இடம் மட்டுமே இல்லாமல், கவுண்ட்டியில் பதிவுப்பெற்ற *அனைத்து* வாக்காளர்களுக்காகவும் வாக்கு மையங்கள் திறந்திருக்கும்.

இந்த மாற்றத்தால் வாக்காளர்கள் பாதிக்கப்படும் விதத்தை புரிந்துகொள்ள தேவையான உள்ளடக்கம் இந்த தேர்தல் நிர்வாகத் திட்டத்தில் (EAP) சேர்க்கப்பட்டுள்ளது. ஒரு EAP வரைவு முடிவடைந்ததும், இத்திட்டத்தை இறுதி செய்வதற்கு முன்பாக பொதுமக்களின் கருத்துரை, கருத்து, மற்றும் பரிந்துரைகளை ROV நாடும். ஒவ்வொரு பின்தொடர் திருத்த EAP வரைவையும் வெளியிட்டப்பிறகு, EAP அதில் செய்யப்பட்ட திருத்தங்கள், மற்றும் வாக்கு மையங்கள் மற்றும் வாக்குச்சீட்டை போடும் இடங்களாக தேர்வுசெய்யப்பட்ட இடங்கள் பற்றிய கருத்துக்களை தெரிவிக்க பொதுமக்களுக்கு கருத்து தெரிவிக்கும் காலத்தை வழங்கும். பொதுமக்கள் கருத்து கூறும் காலம் முடிவுக்கு வந்ததும், கவுண்ட்டியின் இறுதி EAP முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டு California மாநில செயலாளரிடம் (SOS) ஒப்புதலுக்காகச் சமர்ப்பிக்கப்படும்.

VCA மாற்றங்கள் குறித்து சமூகத்திற்கு முழுவதுமாக அறிவிக்கப்பட்டிருப்பதை மேலும் உறுதி செய்ய, ஒரு வாக்களிப்பு அணுகல் ஆலோசனைக் கமிட்டி (VAAC) மற்றும் மொழி அணுகல் ஆலோசனைக் கமிட்டி (LAAC) ஆகிய இரண்டையும் ROV நிறுவியது. VAAC இன் நோக்கம், மூத்தவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் தேர்தல் செயல்முறையை அணுகுவது குறித்து அவர்களுக்கு ஆலோசனை வழங்குதல், அதை மேம்படுத்துவதில் உதவுதல் மற்றும் பரிந்துரைகளை வழங்குவதாகும். அனைத்து வாக்காளர்களுக்கும் சுயாதீனமாகவும் ரகசியமாகவும் வாக்களிக்கும் வாய்ப்பை வழங்குவதே VAAC இன் குறிக்கோளாகும். LAAC இன் நோக்கம் என்னவெனில், அது ஆங்கிலம் தவிர்த்து வேறு மொழிகளை பிரதானமாக பேசும் வாக்காளர்களுக்கு தேர்தல் செயல்முறைக்கான மொழியை அணுகுவதில் சம்பந்தப்பட்ட விவகாரங்களை பற்றி ஆலோசனை வழங்குவது, உதவுவது மற்றும் பரிந்துரைகளை வழங்குவதாகும். மொழி அணுகல் சந்தர்ப்பங்களுக்கான மேம்பாடுகளுக்கு உதவுவதே LAAC இன் நோக்கமாகும். இரண்டு கமிட்டிகளுமே ROV க்கு முக்கிய வழிகாட்டுதல்களை வழங்குகின்றன மற்றும் அவை வாக்காளர்களை சென்றடைதல் மற்றும் கவுண்ட்டிக்கான தேர்தல் நிர்வாகத்திற்கான அடிப்படை

கூறுகளாகும். LAAC அல்லது VAAC உறுப்பினர் பதவிக்கான விண்ணப்பங்களை நடப்பு அடிப்படையில் ROV ஏற்றுக்கொள்கிறது. இதில் ஏதேனும் ஒரு கமிட்டியில் உறுப்பினராவதற்காக விண்ணப்பிக்க விரும்பினால், அதற்கான விண்ணப்பத்தை ROV இன் வலைத்தளத்தில் காணலாம்: www.sccvote.org/voterschoice.

குடிமக்களுக்கு VCA மற்றும் சமூக ஈடுபாட்டிற்கான வாய்ப்புகளை குறித்து தெரிவிப்பதற்கான தனது வாக்காளர் கல்வித் திட்டத்தை விரிவுப்படுத்த வாக்காளர் கல்வி மற்றும் வாக்காளர் அவுட்ரீச் கூட்டணியை (VEOC) நிறுவுவதற்கும் கூட ROV திட்டமிடுகிறது. EAP இல் இந்த கமிட்டிகள் மற்றும் பல்வேறு கூட்டாண்மை அமைப்புகளிடமிருந்து கிடைத்த கருத்தும் தகவலும் அடங்கும். VCA மற்றும் Santa Clara கவுண்ட்டியில் தேர்தல்களை நிர்வகிப்பதற்கான புதிய வழிமுறைகளின் வெற்றிகரமான அமலாக்கத்திற்கு சமூக ஆதரவை பெறுவது மிகவும் முக்கியமாகும்.

மார்ச் 3, 2020 அன்று நடக்கும் அதிபர் முதன்மைத் தேர்தல் California வாக்காளர் தேர்வுச் சட்டத்தின் கீழ் நடைபெறும் முதல் தேர்தலாகும். தேர்தல்களில் VCA ஐ செயல்படுத்த Santa Clara கவுண்ட்டி எவ்வாறு திட்டமிடுகிறது என்பதை குறித்த வழிகாட்டுதலை இந்த ஆவணம் வழங்குகிறது. குறிப்புக்கு, ஏதேனும் தொழில்நுட்ப அல்லது தேர்தல் குறித்த சொற்கள் பிற்சேர்க்கை A இல் உள்ள சொற்களஞ்சியத்தில் வரையறுக்கப்படும் மற்றும் அடிக்கடி கேட்கப்படும் கேள்விகளின் பட்டியலை பிற்சேர்க்கை R இல் காணலாம்.

# பகுதி 1 – தேர்தல் நிர்வாகத் திட்டம்

வாக்காளர் தேர்வுச் சட்டத்தை (VCA) செயல்படுத்தும் ஒவ்வொரு கவுண்ட்டியும் மாற்றங்கள் வாக்காளர்களை எவ்வாறு பாதிக்கும் என்பதை புரிந்துகொள்ள அவசியமான தகவல்களை கொண்ட தேர்தல் நிர்வாகத்திட்டத்தை (EAP) உருவாக்க வேண்டும். EAP இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படும்: பகுதி 1 - தேர்தல் நிர்வாகம் மற்றும் பகுதி 2 - கல்வி மற்றும் அவுட்ரீச் திட்டம்.

## அஞ்சல்-மூலம்-வாக்களிப்பு (VBM) செயல்முறை

EAP இல் வாக்கு மையங்கள் மற்றும் வாக்குச்சீட்டை போடும் இடம் மற்றும் அதற்குரிய நேரம், மொழி அணுகல் ஆலோசனைக் கமிட்டி (LAAC) மற்றும் வாக்களிப்பு அணுகல் ஆலோசனைக் கமிட்டி (VAAC) ஆகிய இரண்டின் நிறுவல், வாக்காளர் கல்வி மற்றும் அவுட்ரீச் திட்டம், பொதுமக்கள் உள்ளீடு மற்றும் அறிவிப்பு பரிசீலனைகள் மற்றும் பிற தொடர்புடைய தகவல்கள் ஆகியவை உள்ளடங்கும்.

வாக்கு மைய மாதிரியில், பதிவுப்பெற்ற அனைத்து வாக்காளர்களும் அஞ்சல்-மூலம்-வாக்களிக்கும் வாக்காளர்களாக மாற்றப்பட்டு மற்றும் அஞ்சல்-மூலம்-வாக்களிக்கும் தொகுப்பு அவர்களுக்கு அனுப்பிவைக்கப்படும். இந்த தொகுப்புகள் பின்வரும் விவரங்களை கொண்டிருக்கும் ஒரு வெள்ளை நிற உறையில் வாக்காளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும்:

- ஒரு நீல நிற பதில் அனுப்பும் உறை
- அதிகாரப்பூர்வ வாக்குச்சீட்டு, தேர்தலில் எத்தனை போட்டிகள் இருக்கிறது என்பதன் அடிப்படையில் ஒன்றுக்கும் மேற்பட்ட வாக்குச்சீட்டு அட்டைகள்
- வாக்குச்சீட்டை எவ்வாறு பூர்த்திசெய்து அனுப்புவது என்பது தொடர்பான அறிவுரைகளை கொண்ட ஒரு தாள்
- வாக்கு மையம் மற்றும் வாக்குச்சீட்டை போடும் இடங்கள் மற்றும் செயல்படும் நேரம் கொண்ட ஒரு தாள்
- “நான் வாக்களித்தேன்” என்கிற ஒரு ஸ்டிக்கர்
- தேவைப்பட்டால், கூடுதல் தகவல் கொண்ட ஒரு கூடுதல் தாள்

அனைத்து வாக்குச்சீட்டுகளும் தேர்தல் தேதிக்கு 29 நாட்கள் முன்னதாக தொடங்கி அமெரிக்க அஞ்சல் சேவை வழியாக அஞ்சல் செய்யப்படும். அதைத் தொடர்ந்து சீக்கிரத்திலேயே வாக்காளர்களுக்கு அவர்களது அஞ்சல்-மூலம்-வாக்களிக்கும் தொகுப்புகள் வந்து சேர தொடங்கிவிடும்.

அஞ்சல்-மூலம்-வாக்களிக்கும் வாக்குச்சீட்டை பூர்த்திசெய்து முடித்தவுடன், வாக்காளர்கள் தங்களுக்கு வழங்கப்பட்ட அஞ்சல் கட்டணம் செலுத்திய உறையில் வழக்கமான அஞ்சல் மூலம் வாக்குச்சீட்டை திரும்ப அனுப்பலாம், அல்லது ஏதேனும் வாக்கு மையத்திலோ அல்லது வாக்குச்சீட்டு போடும் இடத்திலோ வாக்குச்சீட்டை திருப்பலாம். அனைத்து வாக்கு மையங்களும் வாக்குச்சீட்டை போடும் இடமாகவும் செயல்படும், அதே சமயம் சில வாக்குக்சீட்டை போடும் இடங்கள் தனித்தும் கவுண்ட்டியை சுற்றிலும் ஒதுக்கப்பட்ட இடங்களிலும் காணப்படும்.

ஒரு வாக்காளருக்கு வாக்குச்சீட்டு சரியான நேரத்தில் கிடைக்கவில்லை எனில், அல்லது தனது வாக்குச்சீட்டில் அவர் ஏதேனும் தவறு செய்துவிட்டால், தங்களது வாக்குச்சீட்டை மாற்றித்தரும்படி அவர்கள் கோரலாம். மாற்று வாக்குச்சீட்டுடன் ஒரு புதிய அஞ்சல்-மூலம்-வாக்களிக்கும் தொகுப்பு அவர்களுக்கு அஞ்சல் செய்யப்படும். தேர்தலுக்கு முன்பாக ஏழு நாட்களுக்கும் குறைவான நேரத்தில் வாக்காளர்கள் தங்கள் வாக்குச்சீட்டை மாற்ற வேண்டுமெனில், புதிய வாக்குச்சீட்டை பெற அவர்கள் வாக்காளர் பதிவாளர் அலுவலகத்தையோ (ROV), அல்லது ஏதேனும் ஒரு வாக்கு மையத்திற்கோ செல்ல வேண்டும்.

ஆங்கிலம் தவிர்த்து பிரதானமாக வேறு மொழி பேசும் பதிவுப்பெற்ற வாக்காளர்களுக்கு, வாக்குச்சீட்டு எட்டு மொழிகளில் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும்: சீன, ஸ்பானிஷ், டகலாக், வியட்நாமிய, கெமர், கொரிய, இந்தி மற்றும் ஜப்பானிய மொழி வாக்காளர்கள் வாக்களிக்க பதிவுசெய்யும் பொழுது, இந்த மொழிகளிலிருந்து தங்களுக்கு விருப்பமான மொழியை பதிவு படிவத்தில் குறிப்பிடலாம். வாக்குச்சீட்டுகளும் அஞ்சல்-மூலம்-வாக்களிப்பதற்கான பொருட்களும் அவர்களுக்கு விருப்பமான மொழியில் அனுப்பிவைக்கப்படும். ROV அலுவலகத்தை தொலைபேசி ((408) 299-VOTE), தொலைநகல் ((408) 998-7314), மின்னஞ்சல் (voterinfo@rov.sccgov.org) வாயிலாகவோ, நேரிலோ அல்லது வாக்காளர் செயல் கோரிக்கை படிவம் (VARF) வாயிலாகவோ தொடர்புகொண்டு வாக்காளர்கள் தங்களுக்கான விருப்ப மொழியை மாற்றுவதற்காக கோரலாம். வாக்காளர் VARF ஐ ROV அலுவலகத்திலிருந்து எடுத்துக்கலாம், அல்லது அவர்களுக்கு அது மின்னஞ்சல், தொலைநகல் அல்லது அஞ்சல் மூலம் அனுப்பப்படலாம். இதற்கு மாற்றாக, VARF, ROV வலைத்தளத்திலும் கவுண்ட்டி வாக்காளர் தகவல் வழிகாட்டுதலிலும் (CVIG) கிடைக்கும்.

## அஞ்சல் மூலமாக அணுகக்கூடிய வாக்களிப்பு

ROV அலுவலகத்தை தொடர்புகொண்டும் வாக்காளர்கள் அணுகக்கூடிய வாக்களிக்கும் பொருட்களுக்கு கோரிக்கை வைக்கலாம். ஒரு வாக்காளர் அக்கோரிக்கையை முன்வைத்தவுடன், அவர்கள் ஒரு நிரந்தர பட்டியலில் சேர்க்கப்படுவார்கள், அதோடு ஒவ்வொரு தேர்தலுக்கும் அவர்களுக்கு அணுகக்கூடிய விதத்திலான வாக்களிக்கும் பொருட்கள் அனுப்பிவைக்கப்படும். வாக்களிப்பதில் அவர்கள் செயலற்றுப்போனாலோ, கவுண்ட்டியிலிருந்து வெளியேறினாலோ, மோசமான குற்றவாளிகளின் பட்டியலில் அவர்கள் பெயர் இடம்பெற்றாலோ, அல்லது இறந்துவிட்டாலோ அவர்கள் இந்த பட்டியலிலிருந்து நீக்கப்படுவார்கள்.

வாக்காளர்கள் கோரக்கூடிய வேறு ஒரு அணுகலுக்கான விருப்பம் என்னவெனில், அது தொலைநிலையிலிருந்து அஞ்சல்-மூலம்-வாக்களிப்பு அணுகலை (RAVBM) பயன்படுத்துவதாகும். RAVBM முறை மாற்றுத்திறனாளிகளாக உள்ள பதிவுப்பெற்ற வாக்காளர்கள், அத்துடன் ராணுவத்தினர் மற்றும் கடல்கடந்து வாழும் வாக்காளர்கள் மட்டுமே பயன்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.[1] RAVBM வாக்காளர்களுக்கு தங்கள் அதிகாரப்பூர்வ வாக்குச்சீட்டை அணுகுவதற்கான இணையுடன் ஒரு மின்னஞ்சல் அனுப்பப்படும். அதோடு

[1] California தேர்தல் குறியீடு §303.3

வாக்குச்சீட்டை எவ்வாறு அச்சிட்டு பூர்த்திசெய்து தேர்தல் தேதிக்கு ள் அதை ROV க்கு திருப்பி அனுப்புவது என்பதை குறித்த வழிமுறைகளும் அதில் கொடுக்கப்பட்டிருக்கும். எந்தவொரு பதிவுப்பெற்ற வாக்காளருக்கு இருப்பதை போன்றே, ஒரு RAVBM வாக்காளருக்கும் தனது வாக்குச்சீட்டை திருப்பி அனுப்ப மூன்று வழிகள் உள்ளன: வழக்கமான அஞ்சல் வழியாக, வாக்குச்சீட்டை ஒரு வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸ் அல்லது ஏதேனும் வாக்கு மையத்தில் திருப்புவதன் மூலம்.

தேர்வு செய்த திரும்ப அனுப்பும் முறை எதுவாக இருந்தாலும், வாக்குச்சீட்டுகளை ஒரு உறைக்குள் வைத்தே திரும்ப அனுப்ப வேண்டும். வாக்காளர்கள் அஞ்சல்-மூலம்-வாக்களிக்கும் உறைக்குள் வைக்கப்பட்டிருந்த நீல நிற பதில்ப அனுப்பும் உறையையே பயன்படுத்த வேண்டுமென பரிந்துரைக்கப்படுகிறது. ROV இன் கட்டணமில்லா எண்ணான (866) 430-8683 ஐ அழைத்து வாக்குச்சீட்டை திரும்ப அனுப்பும் உறையை மாற்றித்தரும்படி கோரிக்கை வைக்கலாம், ROV அலுவலகம் அல்லது வாக்கு மையத்திலிருந்து ஒன்றை எடுத்துக்கலாம். மாற்று வாக்குச்சீட்டை திரும்ப அனுப்பும் உறைகள் வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸுகள் உள்ள இடங்களிலும் கிடைக்க ஏற்பாடு செய்யப்படும். வாக்காளர்கள் தங்கள் சொந்த உறையைப் பயன்படுத்தவும் தேர்வு செய்யலாம். ஆனால் அவர்கள் தங்கள் வாக்குச்சீட்டுடன் இணைக்கப்பட்டுள்ள வாக்காளர் உறுதிமொழிப் பக்கத்தை அச்சிட்டு, கையெழுத்திட்டு இணைக்கவேண்டும். வழக்கமான அஞ்சல் வழியாக வாக்குச்சீட்டைத் திருப்பி அனுப்புவதானால், நீல நிற வாக்குச்சீட்டு திருப்பியளிக்கும் உறைகளுக்கு எந்த அஞ்சல் கட்டணமும் தேவையில்லை. அதே சமயம், சொந்த உறையை பயன்படுத்தித் திருப்பியளிக்கும்பொழுது போதுமான அஞ்சல் கட்டணம் தேவைப்படும்.

மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கும், மருத்துவ அவசரநிலை காரணமாக வீடுகளில் அடைப்பட்ட வாக்காளர்களுக்கும் வாக்குச்சீட்டு தேவைப்படுகிறது மற்றும் தனிப்பட்ட முறையில் தங்கள் வாக்குச்சீட்டை மீட்க முடியாத நிலைகளில் உள்ளவர்களுக்கு அவசரநிலை வாக்குச்சீட்டு விநியோக நடைமுறை பயன்படுத்தப்படுகிறது. முன்னதான வாக்களிப்பு விண்ணப்பம் (பிற்சேர்க்கை B) பூர்த்தி செய்யப்பட்டு, ROV இன் தேர்தல் தகவல் மேலாண்மை அமைப்பு (EIMS) மூலம் தற்போதைய பதிவு மற்றும் கையெழுத்துப் பொருத்தத்தின் மூலம் சரிபார்க்கப்படுவதற்காக திருப்பி அனுப்பப்படவேண்டும். பதிவுசெய்யப்பட்ட வாக்காளர் முன்னதான வாக்களிப்பு விண்ணப்பத்தை பூர்த்தி செய்து, கையெழுத்திட்டு, மற்றும் தேதியிட வேண்டும். வாக்காளரால் தனது விண்ணப்பத்தில் கையெழுத்திட முடியாவிட்டால், வாக்காளர் அதில் “X” போட்டு கையெழுத்திட யாராவது உதவலாம். வாக்காளருக்கு உதவி செய்யும் நபர் “சாட்சியளிப்பவர்” என்று எழுதி, தங்கள் பெயரை அச்சிட்டு, கையெழுத்திட வேண்டும். பின்னர் வாக்காளர் பூர்த்தி செய்யப்பட்ட முன்னதான வாக்களிப்பு விண்ணப்பத்துடன் அந்த நபரை ROV க்கு அனுப்புவார். வாக்காளரின் தகவல் மற்றும் கையெழுத்து EIMS இல் ROV மூலம் சரிபார்க்கப்படும். சரிபார்க்கப்பட்டதும், வாக்காளருக்கு ஒரு வாக்குச்சீட்டு வழங்கப்படலாம் மற்றும் முழுமையான அஞ்சல் மூலம் வாக்களிப்புக்கான தொகுப்பு தயாரிக்கப்படும். வாக்காளருக்கு உதவுபவர் அந்த வாக்குச்சீட்டை வாக்காளர் உள்ள இடத்திற்கு எடுத்துச் செல்வார். பூர்த்தி செய்தவுடன், அந்த

வாக்குச்சீட்டை மற்ற அஞ்சல்-மூலம் வாக்களிக்கும் வாக்குச்சீட்டுகளுடன் இணைந்து செயல்படுத்துவதற்காக ROV க்குத் திருப்பி அனுப்பலாம்.

கவுண்ட்டி சிறையில் அடைக்கப்பட்டுள்ள வாக்காளர்களும்கூட அவசர வாக்குச் சீட்டு விநியோக முறையைப் பயன்படுத்தலாம். மாநில அல்லது கூட்டாட்சிச் சிறையில் அடைக்கப்பட்டுள்ள வாக்காளர்கள் வாக்களிக்க சட்டப்படி தகுதியற்றவர்கள்.

## வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸ் இடங்கள்

பிப்ரவரி 2019 மாநில செயலாளரிடமிருந்து (SOS) வந்த பதிவுசெய்த அறிக்கையின்படி, Santa Clara கவுண்ட்டியில் தகுதிபெற்ற வாக்காளர்களின் எண்ணிக்கை சுமார் 1.2 மில்லியன் ஆகும். தற்போது, கவுண்ட்டியில் சுமார் 910,000 பேர் வாக்களிக்கப் பதிவு செய்யப்பட்டுள்ளனர். மார்ச் 2020 அதிபர் முதன்மைத் தேர்தலுக்குள் அந்த எண்ணிக்கை 1 மில்லியன் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களாக அதிகரிக்கும் என்று ROV எதிர்பார்க்கிறது. இந்த எண்ணிக்கையைப் பயன்படுத்தி, ஒரு கவுண்ட்டியானது வாக்காளர்களுக்கு வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸ் இடங்களை அளிக்க தேவையான அளவுருக்களை California தேர்தல் குறியீடு அமைக்கிறது:

- பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு 15,000 வாக்காளர்களுக்கும் தேர்தல் தேதிக்கு 28 நாட்களுக்கு முன்பும், தேர்தல் தேதியிலும் ஆக மொத்தம் 29 நாட்களுக்கு குறைந்தபட்சம் ஒரு (1) வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸ் உள்ள இடம் இருக்கவேண்டும். முன்மொழியப்பட்ட வாக்குச்சீட்டை போடும் இட எல்லைகளின் வரைபடத்திற்கு, பிற்சேர்க்கை C ஐப் பார்க்கவும்.

வாக்காளர் பதிவாளரால் (ROV) எதிர்பார்க்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையைப் பயன்படுத்தி பார்த்தால், குறைந்தபட்சம் 67 வாக்குச்சீட்டை போடும் இடங்கள் தேவை. மொத்தம் 91 இலக்கு கொண்ட டிராப்-பாக்ஸ் இடங்களுக்கு, ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது ஒரு வாக்குச்சீட்டை போடும் இடத்தை அமைக்க ROV திட்டமிட்டுள்ளது. முன்மொழியப்பட்ட டிராப்-பாக்ஸ் இடங்களின் தற்போதைய பட்டியல் மற்றும் அவற்றின் செயல்பாட்டு நேரங்களுக்கு பிற்சேர்க்கை D ஐப் பார்க்கவும்.

| எல்லை வகை | குறைந்தபட்ச தேவை | முன்மொழியப்பட்ட[2] எண்ணிக்கை |
|---|---|---|
| வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸ் இடங்கள் (பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு 15000 வாக்காளர்களுக்கும் 1) | 67 | 91 |

[2] ROV ஆல் வடிவமைக்கப்பட்ட எல்லைகள் மதிப்பிடப்பட்ட மக்கள் தொகை எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டவை மற்றும் அவை வழிகாட்டுதல்களாக செயல்படுகின்றன. VCA நிர்ணயித்த எண்ணிக்கை “15,000 வரையிலான” வாக்காளர்களுக்கு சேவை செய்வதாகக் கருதப்பட வேண்டும்; அதாவது, ஒவ்வொரு எல்லையிலும் உள்ள கணிக்கப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையானது VCA ஆல் வரையறுக்கப்பட்ட மொத்த எண்ணிக்கையுடன் எப்போதும் ஒத்துப்போகாது.

வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸுகளுக்கான சிறந்த இடங்களைத் தீர்மானிக்க, வாக்கு மைய இடங்களுக்காக மிகவும் திறனுள்ள இடங்களைத் தீர்மானிக்க உதவும் வகையில் SOS மற்றும் தேர்தல் குறியீட்டால் கட்டாயமாக்கப்பட்ட 14 அளவுகோல்களை ROV பயன்படுத்தியது. இந்த 14 அளவுகோல்கள் வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸுகளை மிகவும் எளிதாக அடையக்கூடிய இடங்களில் கவுண்ட்டிக்கு வழங்குவதற்கும் ROV க்கு உதவுகின்றன. அந்த அளவுகோல்களில் பின்வருவன உள்ளடங்கும்:

1. பொது போக்குவரத்துக்கு எவ்வளவு அருகில் இருக்கிறது
2. அஞ்சல் மூலம் வாக்களிப்பைக் குறைவாக பயன்படுத்தும் சமூகங்களுக்கு அருகாமையில்
3. மக்கள்தொகை மையங்களுக்கு அருகாமையில்
4. மொழி சிறுபான்மை சமூகங்களுக்கு அருகாமையில்
5. மாற்றுத்திறனாளிகளாக உள்ள வாக்காளர்களுக்கு அருகாமையில்
6. வாகன உரிமையாளர் சமூகங்களின் குறைந்த விகிதங்களுக்கு அருகாமையில்
7. குறைந்த வருமானம் உள்ள சமூகங்களுக்கு அருகாமையில்
8. குறைந்த வாக்காளர் பதிவு விகிதமுள்ள சமூகங்களுக்கு அருகாமையில்
9. பூர்வீக அமெரிக்க இட ஒதுக்கீடு உட்பட புவியியல் ரீதியாக தனிமைப்படுத்தப்பட்ட மக்கள் தொகையின் அருகாமையில்
10. இலவச மற்றும் அணுகக்கூடிய பார்க்கிங்
11. வாக்கு மையம் மற்றும் வாக்குச்சீட்டை போடும் இடங்களுக்குச் செல்ல வேண்டிய தூரம் மற்றும் நேரம்
12. அஞ்சல் மூலம் வாக்களிக்க முடியாத மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கான மாற்று முறைகளின் தேவை
13. வாக்கு மையம் மற்றும் வாக்குச்சீட்டை போடும் இடங்களுக்கு அருகிலுள்ள போக்குவரத்து வடிவங்கள்
14. மொபைல் வாக்கு மையங்களின் தேவை

மாற்றுத்திறனாளிகளாக உள்ள அமெரிக்கர்களுக்கான சட்டத்தில் (ADA), மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கு சிறந்த முறையில் சேவையளிக்க போக்குவரத்து மற்றும் மக்கள்தொகை அடர்த்திக்கான அதிகாரப்பூர்வ வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸுகளுக்கான தேவைகளுக்கு ROV இணங்குகிறது தேர்தல் தேதிக்கு 29 நாட்களுக்கு முன்னர் வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸுகள் அந்தந்த இடங்களில் வைக்கப்படும். தேர்தல் தேதிக்கு முன் 27வது நாளுக்குள், அனைத்து டிராப்-பாக்ஸுகளும் நிறுவப்பட்டு பயன்படுத்தத் தயாராக இருக்கவேண்டும். அனைத்து வாக்காளர்களும் பாக்ஸுகளை அணுகுவதை உறுதிசெய்ய, டிராப்-பாக்ஸுகள் கீழ்வரும் வகையில் வடிவமைக்கப்படும்:[3]:

- உடல் சேதம் மற்றும் அங்கீகரிக்கப்படாத நுழைவைத் தடுக்க, வெளியில் அமைந்துள்ள எந்தவொரு ஆளில்லாத டிராப்-பாக்ஸும் வன்முறை, நீக்குதல் மற்றும் கொந்தளிப்பான வானிலை ஆகியவற்றைத் தாங்கக்கூடிய நீடித்த பொருட்களால் உருவாக்கப்படும்.
- டிராப் பாக்ஸ்களில் இருக்க வேண்டிய துவாராமானது, வாக்குச்சீட்டுகளைச் சேதப்படுத்தும் அளவிலோ வெளியே எடுக்கக்கூடிய அளவிலோ இருக்கக் கூடாது.

---

[3] தேர்தல் குறியீடு §20132 ஐ பார்க்கவும்

- எந்தவொரு அங்கீகரிக்கப்படாத அணுகலும் ஒரு அங்கீகரிக்கப்படாத அணுகல் நடந்துள்ளதற்கான உடல் ஆதாரங்களை ஏற்படுத்தும் வகையில் டிராப்-பாக்ஸுகள் வடிவமைக்கப்பட்டுள்ளன. ஒரு தேர்தல் அதிகாரி இந்த பிரிவின் நோக்கங்களுக்காக சேதத்தை அடையாளம் காட்டும் ஒரு முத்திரையைப் பயன்படுத்தலாம்.
- ஒரு டிராப்-பாக்ஸ் வாக்குச்சீட்டுகள் எங்கு செருகப்பட வேண்டும் என்பதை அடையாளம் காட்டும் குறிப்பிட்ட குறிகளைக் கொண்டிருக்கும்.
- ஒவ்வொரு டிராப்-பாக்ஸுக்கும் ஒரு தனித்துவமான அடையாளம் காணும் எண் ஒதுக்கப்படும். அது டிராப்-பாக்ஸில் இடம் பெற்றிருக்கும் மற்றும் நியமிக்கப்பட்ட வாக்குச்சீட்டு மீட்பாளர்கள் மற்றும் பொதுமக்களாலும் எளிதில் அடையாளம் காணப்படும்.
- டிராப்-பாக்ஸில் "அதிகாரப்பூர்வ வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸ்" என தெளிவாகவும், காணக்கூடியதாகவும் குறிக்கப்படும்.
- டிராப்-பாக்ஸ் வன்பொருள் எந்தவிதமான இறுக்கமான பிடிப்பு, கிள்ளுதல் அல்லது மணிக்கட்டில் முறுக்குதல் இல்லாமல் இயக்கக்கூடியதாக இருக்கும்.
- டிராப்-பாக்ஸ் வன்பொருளை வாக்காளர் இயக்க ஐந்து (5) பவுண்டுகளுக்கு மேல் அழுத்தம் தேவையில்லை.
- சக்கர நாற்காலியைப் பயன்படுத்தும் ஒரு நபருக்கு தரை அல்லது நிலத்திலிருந்து 15 முதல் 48 அங்குலங்கள் வரை எட்டக்கூடிய வகையில் டிராப்-பாக்ஸுகள் இயக்கக்கூடியதாக இருக்கும் (இது வாகன ஓட்டுநர்களின் பயன்பாட்டுக்கான டிராப்-பாக்ஸுக்குப் பொருந்தாது).
- வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸில் உள்ள குறிகள் ஒரு தனித்துவமான வண்ண வகையாக இருக்கவேண்டும். அது பின்னணி வண்ணத்திலிருந்து எடுப்பாகத் தெரியவேண்டும் மற்றும் "கண்ணை கூசாத" பூச்சை கொண்டிருக்கவேண்டும்.
- டிராப்-பாக்ஸுகள் அதிகாரப்பூர்வமானவை மற்றும் பாதுகாப்பானவை என்று பொதுமக்கள் உணரும் வகையில் வடிவமைக்கப்பட வேண்டும்,
- கவுண்ட்டி முழுவதும் உள்ள ஒவ்வொரு வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸும், பணியாளர்கள் உள்ளவை மற்றும் பணியாளர்கள் இல்லாதவை ஆகிய இரண்டுமே ஒரே மாதிரியான பயன்பாட்டு அம்சங்களைக் கொண்டிருக்கவேண்டும். மேலும் ஒத்த வடிவமைப்பு, வண்ண அமைப்பு மற்றும் பொதுமக்களால் அடையாளம் காண வசதியாக குறிகளைக் கொண்டிருக்கவேண்டும்.
- வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸின் அளவு Santa Clara கவுண்ட்டியின் பயன்பாடு மற்றும் தேவைகளை அடிப்படையாகக் கொண்டது.

அதிகாரப்பூர்வ வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸுகளை பற்றி நினைவில் கொள்ள வேண்டிய சில முக்கிய விஷயங்கள்:

- டிராப்-பாக்ஸுகளில் வாக்குச்சீட்டுகளை திருப்பி அளிக்க எந்த அஞ்சல் கட்டணமும் தேவையில்லை.
- அஞ்சல் மூலம் வாக்களிப்புக்கான வாக்குச்சீட்டுகள் தேர்தல் தேதியன்று இரவு 8:00 மணிக்குப் பிறகு ஏற்கப்படாது.
    - தேர்தல் தேதியன்று சரியாக இரவு 8:00 மணிக்கு டிராப்-பாக்ஸுகள் பூட்டப்படும்.
    - வாக்கு மையம் மூடப்படும் போது வாக்காளர்கள் தங்கள் வாக்குச் சீட்டைத் திருப்பி அளிப்பதற்காக ஏற்கனவே வரிசையில் இருந்தால் அல்லது நீதிமன்ற உத்தரவின்படி நேரம் நீட்டிக்கப்பட்டிருந்தால், விதிவிலக்கு அளிக்கப்படும்.

- அதிகாரப்பூர்வ வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸை சேதப்படுத்துவது குற்றமாகும்.[4]
- பெட்டி நிரம்பியிருந்தால், சேதப்படுத்தப்பட்டிருந்தால் அல்லது சேதமடைந்திருந்தால், ஏதேனும் ஒரு தேர்தல் அதிகாரிக்குத் தெரிவிக்கும் வகையில் ஒவ்வொரு டிராப்-பாக்ஸிலும் ஒரு அறிவிப்பு வைக்கப்படும்.
- டிராப்-பாக்ஸ் சேதப்படுத்தப்பட்டுள்ளது அல்லது சேதமடைந்துள்ளது என்பதை ROV அல்லது SOS க்கு அறிவிக்க, பெட்டிகளில் ROV அலுவலக எண் மற்றும் கட்டணமில்லா எண் இருக்கவேண்டும்[5].

ஆங்கிலம் தவிர்த்து பிரதானமாக வேறு மொழி பேசும் வாக்காளர்களுக்குப் போதுமான அணுகல் இருப்பதை உறுதிசெய்ய, டிராப்-பாக்ஸுகள் அனைத்து எட்டு மொழிகளிலும் “அதிகாரப்பூர்வ வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸ்” என்று குறிக்கப்படும்: சீன, ஸ்பானிஷ், டகலாக், வியட்நாமிய, கெமர், கொரிய, இந்தி மற்றும் ஜப்பானிய மொழிகள்.

கூடுதலாக, ஒவ்வொரு வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸிலும் கூடுதல் வாக்குச்சீட்டு திருப்பியளிக்கும் உறைகள் தேவைப்பட்டால் கிடைக்கின்றன என்று வாக்காளருக்கு அறிவுறுத்தும் அடையாளம் இருக்கும். உறையின் மீது உள்ள வழிமுறைகளைப் பின்பற்றுமாறு வாக்காளருக்கு அறிவுறுத்தப்படுகிறது. அதில் அவர்களின் பெயர், வசிப்பிட முகவரி, பிறந்த தேதி மற்றும் அவர்கள் கையெழுத்திடுதல் ஆகியவை அடங்கும். வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸை பயன்படுத்தினால், வாக்காளரின் தகவல் மற்றும் கையெழுத்துத்துடன் ஒரு உறைக்குள் வைத்து, வாக்குச்சீட்டுகளை திருப்பி அனுப்ப வேண்டும். ஏதேனும் கேள்விகள் இருந்தால் அல்லது மேலதிக உதவி தேவைப்பட்டால் அழைக்குமாறு வாக்காளருக்கு அறிவுறுத்தும் கட்டணமில்லா எண் வழங்கப்படும்

## வாக்கு மையங்கள்

வாக்காளர் தேர்வுச் சட்டம் (VCA) பல புதிய மற்றும் ஆர்வமூட்டும் மாற்றங்களைக் கொண்டு வரும். வாக்கு மையங்கள் 11 நாட்கள் வரை திறந்திருக்கும். புதிய மற்றும் மேலும் அணுகக்கூடிய வாக்களிக்கும் உபகரணங்கள், மொழி உதவி ஆகியவை பொருத்தப்பட்டு, நிபந்தனை வாக்காளர் பதிவு (CVR) மற்றும் ஒரே நாளில் வாக்களித்தல் ஆகியவை அளிக்கப்படும். கூடுதலாக, வாக்காளர்கள் ஒதுக்கப்பட்ட ஒரு வாக்குப்பதிவு இடத்திற்கு மட்டுப்படுத்தப்பட மாட்டார்கள். மாறாக Santa Clara கவுண்ட்டி முழுவதும் கிடைக்கக்கூடிய சுமார் 110 வாக்கு மைய இடங்களில் ஏதேனும் ஒன்றுக்குச் செல்லும் விருப்பத்தேர்வு உள்ளது.

VCA இன் கீழ், பாரம்பரிய வாக்குப்பதிவு இடங்களில் முன்பு நடைமுறையில் இருந்ததை விட அதிக நாட்களுக்கு வாக்கு மையங்கள் திறந்திருக்க வேண்டும். இரண்டு முன்னதான வாக்களிப்பு காலங்களின் கீழ் வாக்கு மையங்கள் இயக்கப்பட வேண்டும்: (1) தேர்தல் தேதிக்கு பத்து நாட்களுக்கு முன்னர், மற்றும் தேர்தல் தேதி உட்பட, மொத்தம் 11 நாட்கள், மற்றும் (2) தேர்தல் தேதிற்கு மூன்று நாட்களுக்கு முன்னர், மற்றும் தேர்தல் தேதி உட்பட, மொத்தம் நான்கு நாட்கள்.

---

[4] California **தேர்தல் குறியீடு** §18500-**ஐ பார்க்கவும்**

[5] California **தேர்தல் குறியீடு** §20132 **ஐ பார்க்கவும்**

ஒரு கவுண்ட்டி வாக்காளர்களுக்கு வாக்கு மைய இடங்களில் வழங்க வேண்டிய அளவுருக்களை California தேர்தல் குறியீடு அமைக்கிறது:

- தேர்தல் தேதிக்கு பத்து (10) நாட்கள் முன்பிலிருந்து தொடங்கி, தேர்தல் தேதி உட்பட மொத்தம் பதினொரு (11) நாட்களுக்கு, ஒவ்வொரு 50,000 வாக்காளர்களுக்கும் ஒரு வாக்கு மையம் இயக்கப்பட வேண்டும்.
- தேர்தல் தேதிக்கு மூன்று (3) நாட்கள் முன்பாகத் தொடங்கி, தேர்தல் தேதி உட்பட மொத்தம் நான்கு (4) நாட்களுக்கு, ஒவ்வொரு 10,000 வாக்காளர்களுக்கும் ஒரு வாக்கு மையம் இயக்கப்பட வேண்டும்.

வாக்காளர்களுக்கு மேலும் சிறந்த சேவை அளிப்பதற்காக, மார்ச் 2020 அதிபர் முதன்மைத் தேர்தலுக்குள் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் கணிக்கப்பட்ட எண்ணிக்கையின் அடிப்படையில், Santa Clara கவுண்ட்டி குறைந்தபட்ச தேவைக்கு மேல் கூடுதலாக இரண்டு 11 நாள் வாக்கு மையங்களையும், குறைந்தபட்சத் தேவைக்கு மேல் கூடுதலாக எட்டு 4 நாள் வாக்கு மையங்களையும் இயக்கத் திட்டமிட்டுள்ளது. ROV உருவாக்கிய இரண்டு வரைபடங்கள் கவுண்ட்டியை 50,000 வாக்காளர்களை மற்றும் 10,000 வாக்காளர்களை கொண்ட பகுதிகளாக பிரிக்கின்றன (பிற்சேர்க்கை E ஐப் பார்க்கவும்). இந்த வரைபடங்கள் வாக்கு மைய இடங்களை தேடும் பணியில் உதவின. 50,000 வாக்காளர்களைக் கொண்ட பகுதிகளைச் சுற்றியுள்ள எல்லைகளைக் கொண்ட வரைபடம் 11 நாள் வாக்கு மையங்களை தேட பயன்படுத்தப்பட்டது, அதே நேரத்தில் 10,000 வாக்காளர்களைக் கொண்ட பகுதிகளைச் சுற்றியுள்ள எல்லைகளைக் கொண்ட வரைபடம் 4 நாள் வாக்கு மையங்களை தேட பயன்படுத்தப்பட்டது.

அனைத்து வாக்கு மையங்களுக்கான செயல்பாட்டு நேரம் தேர்தல் தேதிக்கு முந்தைய நாட்களில் ஒவ்வொரு வசதிக்கும் மாறுபடலாம்.[6] தேர்தல் குறியீடு படி, தேர்தல் தேதியன்று, அனைத்து வாக்கு மையங்களும் காலை 7:00 மணி முதல் இரவு 8:00 மணி வரை வாக்காளர்களுக்காக திறந்திருக்கும்.[7] ROV மூலம் கருதப்படும் சாத்தியமான வாக்கு மையங்களின் பட்டியலைக் காண, பிற்சேர்க்கை F ஐப் பார்க்கவும். வெளியீட்டு சமயத்தில், கருதப்படும் அனைத்து வாக்கு மையங்களும் மாற்றத்திற்கு உட்பட்டவை.

---

[6] ROV இன்னும் வாக்கு மையங்களை பெறுவதற்கான செயல்பாட்டில் உள்ளது மற்றும் வெளியிடும் சமயத்தில் கருதப்பட்டதாக குறிப்பிட்ட அனைத்து இடங்களும் மற்றும் செயல்படும் நேரங்களும் கிடைக்கவில்லை

[7] தேர்தல் குறியீடு §4005

| எல்லை வகை | குறைந்தபட்சத் தேவை | முன்மொழியப்பட்ட[8] எண்ணிக்கை |
|---|---|---|
| 11-நாள் வாக்கு மையங்கள் (பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு 50000 வாக்காளர்களுக்கும் 1) | 20 | 22 |
| 4-நாள் வாக்கு மையங்கள் (பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு 10000 வாக்காளர்களுக்கும் 1) | 80 | 88 |

அட்டவணையில் வழங்கப்பட்ட புள்ளிவிவரங்கள் கணிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டவை. தேர்தல் குறியீடு படி தேர்தலுக்கு 88 நாட்களுக்கு முன்னர் உண்மையான கணக்கீடு தீர்மானிக்கப்படும்[9].

பாரம்பரியமாக, அதிபருக்கான தேர்தல் ஆண்டில், பதிவு செய்வது அதிகரிப்பதை ROV காண்கிறது. ஜூலை 2019 நிலவரப்படி, Santa Clara கவுண்ட்டியில் சுமார் 910,000 வாக்காளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். மார்ச் 2020 அதிபர் தேர்தலுக்கு முன்னர் அந்த எண்ணிக்கை 1 மில்லியன் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களாக அதிகரிக்கும் என்று ROV எதிர்பார்க்கிறது. 2020 நவம்பர் அதிபர் பொதுத் தேர்தலுக்குள் வாக்காளர் பதிவு இன்னும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தல்களுக்கு இடையில் நிலைத்தன்மையை உறுதி செய்வதற்கும், போதுமான எண்ணிக்கையிலான வாக்கு மைய தளங்களை பராமரிப்பதற்கும், நவம்பர் பொதுத் தேர்தலுக்குள் 1.1 மில்லியன் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்கள் இருப்பார்கள் என்ற அடிப்படையில் ROV நியமனங்களை செய்கிறது. இது மார்ச் மற்றும் நவம்பர் தேர்தல்களுக்கு ஒரே வாக்கு மைய இடங்களை வைத்திருக்க ROV ஐ அனுமதிக்கும், மேலும் மாறாத இடங்களுடன் கூடுதலாக VCA ஐ செயல்படுத்தும் போது சேர்ந்து வரும் பிற மாற்றங்களுக்கு மத்தியில் வாக்காளர்களுக்கு ஸ்திரத்தன்மையை உருவாக்குகிறது.

| தகுதியான வாக்காளர்களின் எண்ணிக்கை | பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை | தகுதியான ஆனால் பதிவு செய்யப்படாதவர்களின் எண்ணிக்கை | கணிக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1,200,000 | 910,000 | 290,000 | 1,000,000 |

---

[8] ROV ஆல் வடிவமைக்கப்பட்ட எல்லைகள் மதிப்பிடப்பட்ட மக்கள் தொகை எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டவை மற்றும் அவை வழிகாட்டுதல்களாக செயல்படுகின்றன. VCA நிர்ணயித்த எண்ணிக்கை வாக்காளர்கள் “50,000 வரை” இருந்தால் சேவையளிப்பதற்காக என கருதவேண்டும்; இதன் பொருள் ஒவ்வொரு எல்லையிலும் கணிக்கப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையானது VCA ஆல் வரையறுக்கப்பட்ட மொத்த எண்ணிக்கையுடன் எப்போதும் ஒத்துப்போகாது. சுட்டிக்காட்டப்பட்ட முன்மொழியப்பட்ட எண்ணிக்கை நியமனத்திற்கான குறைந்தபட்ச இலக்கு. கூடுதல் ஆதரவைக் கோரும் எந்த பகுதியிலும் போதுமான அளவுக்கு சேவை வழங்குவதற்காக கூடுதல் இடங்களை ROV பரிசீலிக்கும்.

[9] தேர்தல் குறியீடு §12223

## வாக்காளர் பதிவு

பாரம்பரிய வாக்குப்பதிவு இட மாதிரி மூலம் முன்னர் வழங்கப்பட்டதை விட பல அதிகமான சேவைகளை வாக்கு மையங்களால் வழங்க முடியும். வாக்காளர் பதிவும் வாக்கு மையங்களில் வழங்கப்படும் விரிவாக்கப்பட்ட சேவைகளில் ஒன்று. எந்தவொரு வாக்கு மையத்திலும் வாக்களிக்க பதிவுசெய்யவும், வாக்காளர் பதிவைப் புதுப்பிக்கவும், மற்றும் நிபந்தனையுடன் வாக்களிப்பதற்கான வசதியும் வாக்காளர்களுக்கு இப்போது கிடைக்கும். நிபந்தனை வாக்காளர் பதிவு (CVR) இன் கீழ் வாக்களிக்க தகுதியுள்ள வாக்காளர்கள், CVR உறையுடன் உள்ள வாக்குச்சீட்டைப் பெறுவார்கள்.

15 நாட்கள் பதிவு காலக்கெடுவிற்குள் வாக்களிக்க பதிவு செய்யாத சமூகத்தின் உறுப்பினர்கள், ஒரு வாக்கு மையத்திற்குச் சென்று ஒரே நாளில் பதிவு செய்து வாக்களிக்கவும் முடிகின்ற வசதியை CVR வழங்குகிறது. 15 நாள் பதிவு காலக்கெடு முடிந்த பின்னர் வாக்காளர்கள் தங்கள் முகவரி அல்லது அரசியல் கட்சியைப் புதுப்பிக்கவும் CVR ஐப் பயன்படுத்தலாம். பூர்த்தி செய்யப்பட்ட CVR வாக்குச்சீட்டு ROV அலுவலகத்திற்கு திரும்ப வந்ததுமே, சாத்தியமான வாக்காளர் தகுதிக்காக ஆய்வு செய்யப்படுவார். வாக்காளர் அனைத்து தகுதித் தேவைகளையும் பூர்த்தி செய்கிறார் என சரிபார்க்கப்பட்டிருந்தால் மட்டுமே அவர் வாக்குச்சீட்டு திறக்கப்படும் மற்றும் எண்ணப்படும். CVR உறை வாக்காளரின் பதிவு பிரமாணப் பத்திரமாகவும் செயல்படும், மேலும் தங்கள் ரசீதை வாக்காளர் உறைகளிலிருந்து கிழித்து வைத்துக்கொண்டால் ROV இன் வலைத்தளத்தில் அவர்கள் தங்கள் வாக்குச்சீட்டின் நிலையை கண்காணிக்கலாம்[10].

## மாற்று வாக்குச்சீட்டுகள்

கோரினால் வாக்காளர்களுக்கு மாற்று வாக்குச்சீட்டுகளை வாக்கு மையங்களால் இப்போது வழங்க முடியும். அதே தேர்தலுக்கான வாக்குச்சீட்டை வாக்காளரிடமிருந்து ROV பெறாததை உறுதிசெய்யப்பட்ட பிறகு, வாக்காளர் எந்த வாக்கு மையத்திலும் மாற்று வாக்குச்சீட்டைக் கோரலாம்[11]. வாக்காளரிடமிருந்து வாக்குச்சீட்டு பெறப்பட்டதை ROV ஆல் தீர்மானிக்க முடியாவிட்டால், ROV வாக்காளரை தற்காலிகமாக வாக்களிக்க அனுமதிக்கலாம்.

## தற்காலிக வாக்களிப்பு[12]

எந்தவொரு வாக்கு மையத்திலும், ஒரு வாக்காளர் தற்காலிகமாக வாக்களிக்கலாம். பதிவுசெய்ததாகக் கூறும் ஒரு வாக்காளரின் பதிவு மற்றும் தகுதியை ROV ஊழியர்களால் உடனடியாக தீர்மானிக்க முடியாத நிலையில், அவருக்கு தற்காலிக வாக்குச்சீட்டில் வாக்களிக்க உரிமை உண்டு. அவ்வாறு செய்வதற்கான உரிமையை வாக்காளருக்கு ROV அறிவுறுத்தி மற்றும் வாக்காளருக்கு பின்வருவதை வழங்க வேண்டும்:

- தற்காலிக வாக்குச்சீட்டை போடுவதற்கான செயல்முறை மற்றும்

---

[10] அஞ்சல்-மூலம் வாக்களிப்பு வாக்குச்சீட்டு கண்காணிப்பு வலைத்தளம்: https://eservices.sccgov.org/rov?tab=ab

[11] தேர்தல் குறியீடு §4005

[12] தேர்தல் குறியீடு §14310

நடைமுறைகள் குறித்த எழுத்துப்பூர்வ வழிமுறைகளுடன் ஒரு தற்காலிக வாக்குச்சீட்டு
- வாக்காளரின் பதிவு மற்றும் வாக்களிக்கும் தகுதி குறித்து எழுதப்பட்ட உறுதிப்படுத்தல், வாக்காளர் அதில் கையெழுத்திட வேண்டும்

தற்காலிகமாக வாக்களிக்க, ஒரு வாக்காளர் ROV ஊழியர்களின் முன்னிலையில், வாக்காளர் வாக்களிக்க தகுதியுடையவர் மற்றும் Santa Clara கவுண்ட்டியில் பதிவு செய்யப்பட்டுள்ளார் என்று எழுதப்பட்ட உறுதிமொழியை செயல்படுத்த வேண்டும் (கையெழுத்திட வேண்டும்). ROV இன் பிரதான அலுவலகத்தில் திருப்பித் தருவதற்கு வாக்காளர் ஒரு தற்காலிக வாக்குச்சீட்டு உறைக்குள் வாக்குச்சீட்டை சீல் செய்யவேண்டும்.

அதிகாரப்பூர்வ பிரச்சாரத்தின் போது, ஊழியர்கள் வாக்காளரின் முகவரியைச் சரிபார்த்து, தற்காலிக வாக்குச்சீட்டு உறை மீதுள்ள கையெழுத்து வாக்காளரின் பதிவு உறுதிமொழிப் பத்திரத்தில் உள்ள கையெழுத்துடன் பொருந்துவதை அல்லது வாக்காளரின் பதிவு கோப்பில் உள்ள மற்றொரு கையெழுத்துத்துடன் பொருந்துவதை உறுதிப்படுத்த வேண்டும். முதல், நடுத்தர பெயர் அல்லது இரண்டிற்கும் பதிலாக எழுதும் தலைப்பெழுத்தால் செய்யப்படும் கையெழுத்தில் மாறுபாடு இருப்பது வாக்குச்சீட்டை செல்லாததாக ஆக்குவதில்லை. வாக்குச்சீட்டைத் திறந்து எண்ணுவதற்கு முன்பு கூடுதல் தகுதித் தேவைகளையும் ஊழியர்கள் சரிபார்க்க வேண்டும்.

தற்காலிக வாக்குச்சீட்டைப் பதிவுசெய்யும் எந்தவொரு வாக்காளரும் தங்கள் ரசீதை உறையிலிருந்து கிழித்து வைத்துக்கொள்ளலாம், இதன் மூலம் ROV இன் வலைத்தளத்தில் அவர்கள் தங்கள் வாக்குச்சீட்டின் நிலையை கண்காணிக்கலாம்.[13] வாக்காளர்கள் ROV ஐ தொடர்பு கொள்ளலாம் அல்லது வலைத்தளத்தைப் பயன்படுத்தி[14] தங்கள் வாக்குச்சீட்டு எண்ணப்பட்டதா இல்லையா என்பதையும், அப்படி எண்ணப்படாவிட்டால், அதற்கான காரணத்தையும் கண்டறியலாம். புதிய வாக்களிப்பு முறையை அமல்படுத்துவதன் மூலமும் மின்னணு வாக்கெடுப்பு புத்தகங்களைப் பயன்படுத்துவதாலும் போடப்படும் தற்காலிக வாக்குச்சீட்டுகளின் எண்ணிக்கை கணிசமாகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## வாக்கு மையங்களில் அணுகக்கூடிய வாக்களிப்பு

VCA இன் திட்டமிடல் மற்றும் அமலாக்கத்தின் போது முழுவதிலுமே, வாக்காளருக்கான அணுகல் கருதப்படுவதை உறுதி செய்வதே Santa Clara கவுண்ட்டியின் வாக்காளர் பதிவாளரின்(ROV) நோக்கம். வாக்கு மையத்தின் தேர்வு, வாக்களிக்கும் இயந்திரங்கள் மற்றும் தேர்தல் அதிகாரிகளின் பயிற்சி மற்றும் பணியமர்த்தல் ஆகியவற்றில், வாக்காளர்களின் எந்தவொரு மற்றும் அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்வதே ROV இன் எண்ணமாக இருப்பதால், அணுகல் கருதப்படுகின்ற முக்கிய தலைப்பாக உள்ளது. ஒவ்வொரு வாக்காளருக்கும் பாதுகாப்பான, அணுகக்கூடிய மற்றும் சுயாதீனமான வாக்களிப்பு அனுபவத்தை ஏற்படுத்துவதற்காக, தொலைநிலையிலிருந்து அணுகக்கூடிய அஞ்சல்-மூலம்

---

[13] அஞ்சல்-மூலம் வாக்களிப்பு வாக்குச்சீட்டு கண்காணிப்பு வலைத்தளம்: https://eservices.sccgov.org/rov?tab=ab

[14] தற்காலிக வாக்குச்சீட்டு கண்காணிப்பு வலைத்தளம்: https://eservices.sccgov.org/rov/?tab=pb

வாக்களிப்பு (RAVBM) போன்ற முன்கூட்டியே நிறுவப்பட்ட திட்டங்களுடன் உள்ள புதிய வாக்களிக்கும் இயந்திரங்களை ROV பயன்படுத்தும். Santa Clara கவுண்ட்டி அனைத்து வாக்கு மையங்களிலும் அணுகக்கூடிய வாக்களிப்பை தொடர்ந்து வழங்கும்.[15]

தரங்களை பூர்த்தி செய்யும் வாக்கு மைய வசதிகளின் அம்சங்களையும், மாற்றங்கள் தேவைப்படும் இடங்களையும் தீர்மானிக்க, California மாநில செயலாளரின் அணுகல் சரிபார்ப்பு பட்டியல் ஆய்வை ROV பயன்படுத்துவார். அனைத்து மாற்றங்களும் விநியோக முறையில் மற்றும் வரைபடங்கள், எடுத்துக்காட்டுகள் மற்றும் புகைப்படங்களுடன் கூடிய தனிப்பட்ட வாக்கு மைய கையேட்டில் குறிப்பாக தரப்படும், அவை வசதியை அமைத்து இயக்கும் பொறுப்பில் உள்ள மேற்பார்வையாளர்களுக்கு வழங்கப்படும். மாற்றுத்திறனாளிகளாக உள்ள அமெரிக்கர்களுக்கான சட்டத்தில் (ADA)[16] உள்ள தேவைகளும்,மேலும் ADA பார்க்கிங் இடங்கள், வளைவுகள், கதவுகள், பாதைகள் மற்றும் மற்ற தேவைகளும் மாற்றங்களில் பூர்த்தி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

Santa Clara கவுண்ட்டியில் உள்ள ஒவ்வொரு வாக்கு மையத்திலும் குறைந்தது மூன்று (3) ஆனால் ஆறு (6) வரை, அணுகக்கூடிய வாக்குச்சீட்டை குறிக்கும் சாதனங்கள் (BMD) பொருத்தப்பட்டிருக்கும். Dominion வாக்களிப்பு முறை ICX BMD சில மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கு சுயாதீனமான வாக்களிக்கும் அனுபவத்தை வழங்கும். ஒவ்வொரு வாக்கு மையத்திற்கான BMD களிலும் ADA க்கு இணக்கமான அம்சங்கள் மற்றும் பலவிதமான வாக்களிப்பு முறை விருப்பங்கள் இருக்கும். இந்த அலகுகள் அனைத்து வாக்குச்சீட்டு வகைகள் மற்றும் மொழி பதிப்புகளுடன் நிரலாக்கப்படும்.

Santa Clara கவுண்ட்டியின் மின்னணு வாக்குப்பதிவு முறை பார்வை குறைபாடுள்ள வாக்காளர்களுக்கு உதவி இல்லாமல் தனிப்பட்ட முறையில் வாக்களிக்கவும் மற்றும் வாக்குச்சீட்டை போடும் திறனையும் வழங்குகிறது. அணுகக்கூடிய BMD இல் ஆடியோ வாக்குப்பதிவு கூறு உள்ளது, இதன் மூலம் வாக்காளர்கள் தங்கள் வாக்குச்சீட்டைக் காதால் கேட்டு, வழங்கப்பட்ட அணுகக்கூடிய விசைப்பலகையைப் பயன்படுத்தி அவர்களின் தேர்வுகளை செய்யலாம். எந்த வாக்காளர்-விரும்பும் கலவையிலும் ஆடியோ, காட்சி மற்றும் தொட்டுணரக்கூடிய இடைமுகங்களை பயன்படுத்த இந்த அமைப்பு அனுமதிக்கிறது. வாக்குச்சீட்டைக் குறிக்க முடியாத நிலையில் உள்ள வாக்காளர்கள், வாக்களிக்க உதவ இரண்டு நபர்களை வரை கொண்டு வரலாம். கூடுதலாக, கவுண்ட்டி வாக்காளர் தகவல் வழிகாட்டியின் (CVIG) ஆடியோ டேப்களை ROV வழங்குகிறது, இது கோரினால் கிடைக்கிறது.

ஒன்று அல்லது அதற்கு அதிகமான BMD தோல்வியுற்றால் அல்லது செயலிழந்தால், எந்தவொரு சாதனத்தையும் தேவையானபடி மாற்றுவதற்கான நடைமுறைகளை ROV உடனடியாகத் தொடங்கும். அந்த இடத்தில் கிடைக்கக்கூடிய செயல்படும் அலகுகள், திறன் தேவைகள் மற்றும் செயலிழப்பின் தீவிரம் ஆகியவற்றின் அடிப்படையில் மாற்று செயல்முறைக்கு முன்னுரிமை வழங்கப்படும். ஆதரவு

---

[15] தேர்தல் குறியீடு §19240

[16] மாற்றுத்திறனாளிகளாக உள்ள அமெரிக்கர்களுக்கான சட்ட வலைத்தளம்: https://www.ada.gov/

இயக்க விகிதமாக இருப்பது, ஒவ்வொரு ஆறு (6) வாக்கு மையக் குழுக்களுக்கும் மூன்று (3) அணிகளைக் கொண்ட ஒரு (1) ஆதரவு தளம் கிடைக்கிறது.

ஒவ்வொரு வாக்கு மையத்திலும் வீதியோர (curbside) வாக்களிப்பிற்காக, வாக்கு மைய செயல்முறை மூலம் அனைத்து வாக்காளர் தேவைகளையும் மதிப்பிடுவதற்கும் வழிநடத்துவதற்கும் பயிற்சி பெற்ற வரவேற்பாளருடன் கூடுதலான அணுகல் சேவைகள் கிடைக்கும்.

## மொழி உதவி

ஒவ்வொரு வாக்கு மையத்திற்கும் தேவையான அனைத்து மொழிகளிலும் ஏதாவது விதத்தில் மொழி உதவிகளை வழங்குவதே ROV இன் குறிக்கோள்.[17] Santa Clara கவுண்ட்டியைப் பொறுத்தவரை, அந்த மொழிகள் பின்வருமாறு:

- ஆங்கிலம்
- சீன
- ஸ்பானிஷ்
- டகலாக்
- வியட்நாமிய
- கெமர்
- கொரிய
- இந்தி
- ஜப்பானிய

ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் தேவைகளைப் பொறுத்து, எந்த சமூகத்திலும் முக்கியத்துவம் வாய்ந்த மொழிகளைப் பேசக்கூடிய இருமொழி ஊழியர்களை நியமிக்க ROV முயற்சிக்கும். குறிப்பிட்ட மொழித் தேவைகள் தேவைப்படும் பகுதிகள் அடையாளம் காணப்படும், இருப்பினும், இருமொழி தெரிந்த ஊழியர்கள் கிடைக்காவிட்டால், வாக்கு மைய ஊழியர்கள் ROV ஐத் தொடர்புகொண்டு வாக்காளரை இருமொழி அலுவலக ஊழியர்களுடன் அல்லது கவுண்ட்டியின் தொலைபேசி மொழிபெயர்ப்பு சேவையுடன் பேச வைப்பார்கள்.

வாக்காளர் தரவுத்தளத்திலிருந்து கிடைக்கும் திட்டமிடல் மற்றும் மொழித் தரவுகள் மூலம், எந்த இடங்களில் இரு மொழி ஊழியர்கள் சமூகத்திற்கு சிறந்த முறையில் சேவையாற்ற நியமிக்கப்பட தேவை என்ற இலக்கு ROV க்கு சரியாக தெரியவரும். கவுண்ட்டி முழுவதிலும் உள்ள ஒவ்வொரு வாக்கு மையத்திலும் பணியாற்ற ஒவ்வொரு மொழியிலும் போதுமான இரு மொழித் தேர்தல் அதிகாரிகள் இல்லாவிட்டால், இரு மொழி தேர்தல் அதிகாரிகளை சில மொழி சமூகங்களில் அமைந்துள்ள வாக்கு மையங்களில் நியமிக்கும் இலக்கு வைக்கப்படும்.

அனைத்து வாக்களிப்புப் பொருட்களும் அரசாங்க ரீதியாகக் கட்டாயப்படுத்தப்பட்ட நான்கு மொழிகளிலும் கிடைக்கும். அதிகாரப்பூர்வ வாக்குச்சீட்டுகள், CVR மற்றும் தற்காலிக உறைகள் மற்றும் அனைத்து வாக்கு மைய அடையாளக்குறிகளும் நான்கு கூட்டாட்சியில் கட்டாயமாக்கப்பட்ட மொழிகளிலும், மாநிலத்தில் கட்டாயமாக்கப்பட்ட கெமர் மற்றும் கொரிய மொழிகளிலும், அத்துடன் தேவையில்லை என்றாலும், வரலாற்று ரீதியாக கவுண்ட்டி மூலம் வழங்கப்பட்ட ஜப்பானிய மற்றும் இந்தி ஆகிய மொழிகளிலும் கிடைக்கும்.

---

[17] தேர்தல் குறியீடு §12303

ஒரு குறிப்பிட்ட இருமொழி பணியாளர் கிடைக்காதபோது, வாக்கு மைய ஊழியர்கள் ROV அலுவலகத்தை அழைத்து எங்கள் இருமொழி ஊழியர்களில் ஒருவரிடம் பேசலாம். கூடுதலாக, கவுண்ட்டியின் தொலைபேசி மொழிபெயர்ப்பு சேவை மூலம், நாங்கள் பெறும் எந்த மொழி கோரிக்கையையும் எங்களால் பூர்த்தி செய்யமுடியும்.

அனைத்து வாக்களிப்பு தகவல்களும் நான்கு கூட்டாட்சியில் கட்டாயப்படுத்தப்பட்ட மொழிகளில் அச்சிடப்பட்ட முறையில் மற்றும் மின்னணு முறையிலும் கிடைக்கும் (கவுண்ட்டி வாக்காளர் தகவல் வழிகாட்டி (CVIG) கொண்ட மடிக்கணினி, ஜூன் மற்றும் நவம்பர் 2018 ஆரம்ப வாக்கு மையங்களில் பயன்படுத்தப்பட்ட மாதிரி). மொழி உதவி கிடைப்பதைக் குறிக்கும் அடையாளக் குறிகள் அனைத்து வாக்கு மையங்களிலும் ஒட்டப்பட்டிருக்கும்.

## வாக்கு மையத்தை வைக்கும் இடத்தை கருதுதல்

மாநில செயலாளரால் கட்டாயமாக்கப்பட்டு **வாக்குச் சீட்டு டிராப்-பாக்ஸ் இடங்கள்** பிரிவில் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ள அதே 14 அளவுகோல்களை ROV பயன்படுத்துகிறார். கிடைக்கக்கூடிய பல ஆதாரங்களில் இருந்து சேகரிக்கப்பட்ட தரவு (எ.கா. அமெரிக்க சமூக ஆய்வு, ROV வாக்காளர் தரவுத்தளம், VTA பஸ் நிறுத்தங்கள்) இந்த அளவுகோல்களில் சிலவற்றைக் கணக்கிடப் பயன்படுத்தப்பட்டன. இந்த அளவுகோல்களில் பொது போக்குவரத்து, போக்குவரத்து முறைகள், மக்கள் தொகை மையங்கள், மொழி சிறுபான்மையினர், மாற்றுத்திறனாளிகள், குறைந்த அளவில் சொந்த வாகனம் வைத்திருப்பவர்கள், குறைந்த வருமானம், அஞ்சல் மூலம் குறைந்த அளவில் வாக்களிப்பவர்கள் மற்றும் குறைந்த வாக்காளர் பதிவு ஆகியவை அடங்கும் (சாத்தியமான வாக்கு மையங்கள் மற்றும் வாக்குச்சீட்டை போடும் இடங்களை இலக்குவைக்க பயன்படுத்தப்பட்ட தரவு வரைபடங்களுக்கு பிற்சேர்க்கை G ஐப் பார்க்கவும்).

வாக்கு மையங்களாக இருப்பதற்கு உகந்த இடங்களை தீர்மானிக்க ROV க்கு உதவ “DOTS” எனப்படும் ஒரு தள கருவி உருவாக்கப்பட்டது. இந்த மாதிரி கவுண்ட்டியை 0.5 -மைல் கட்டங்களாக பிரித்தது. மேலே பட்டியலிடப்பட்ட ஒவ்வொரு அளவுகோலிற்கான ஒவ்வொரு கட்டத்திற்கும் ஒன்று முதல் ஐந்து வரை மதிப்பெண் வழங்கப்பட்டது. ஒவ்வொரு மதிப்பெண்ணும் இறுதியில் மொத்த மதிப்பெண்ணை பெற கூட்டப்பட்டது. சாத்தியமான வாக்கு மையம் மற்றும் வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸ் இடங்கள், பின்னர் மதிப்பெண் வரைபடத்தின் மேலே குறிப்பிடப்பட்டன. அதிக மதிப்பெண் பெற்ற கட்டங்கள் அல்லது அதற்கு அருகில் உள்ள இடங்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது, ஏனெனில் அவை அதிகமான அளவுகோல்களை பூர்த்தி செய்தன.

இந்த செயல்பாட்டில் பொதுமக்களிடமிருந்து வந்த உள்ளீடும் கருதப்பட்டது. மக்கள் தொகை மையங்களுக்கு அருகாமையில் இருப்பது, போக்குவரத்து முறைகள், மொழி சிறுபான்மை சமூகங்கள், மாற்றுத்திறனாளிகளாக உள்ள வாக்காளர்கள் மற்றும் பொதுப் போக்குவரத்து ஆகியவை பெறப்பட்ட பொதுக் கருத்துக்களில் மிக முக்கியமாக கருதப்பட்டவை. வரலாற்று ரீதியாக குறைந்த வாக்காளர் பதிவு மற்றும் அஞ்சல்-மூலம் வாக்களிப்பு பயன்பாடு கொண்ட சமூகங்களுக்கு அருகாமையில் இருப்பதற்கு ROV கூடுதல் முக்கியத்துவத்தை

சேர்த்தது, ஏனெனில் இந்த சமூகங்களால் ஒரு வாக்கு மையத்தால் வழங்கப்படும் நிபந்தனை வாக்காளர் பதிவு அல்லது நேரில் வந்து வாக்களித்தல் போன்ற சேவைகளை சிறந்த முறையில் பயன்படுத்த முடியும். பொதுமக்கள் மற்றும் ROV ஊழியர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அளவுகோல்களுக்கு தளம் தேடல் கருவி மேம்பாட்டு செயல்பாட்டில் அதிக மதிப்பெண்கள் வழங்கப்பட்டன.

கூடுதலாக, ஒரு வாக்காளர் ஒரு வாக்கு மையத்திற்கு பயணிக்க வேண்டிய தூரத்தையும் நேரத்தையும் கட்டுப்படுத்த உதவும் வகையில் வாக்கு மைய எல்லைகள் நிறுவப்பட்டன. கிடைக்கும் நிலை, விலை, அளவு, அறையின் வடிவம், பார்க்கிங் அணுகல் மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கு மாற்று முறைகள் தேவை போன்ற பிற அளவுகோல்கள் ஒவ்வொரு வழக்கின் சூழ்நிலையையும் பார்த்து மதிப்பீடு செய்யப்பட்டன.

தற்போது அவர்களிடம் இருக்கின்ற ஆதாரங்களை வைத்து ROV ஆல் மொபைல் வாக்கு மையங்களை வழங்க முடியாது. இருப்பினும், புவியியல் ரீதியாக அதிகம் பேரை கவரும் வகையில் குறைந்தபட்ச தேவையை விடவும் அதிகமான வாக்கு மையங்கள் மற்றும் வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸ் இடங்களை வழங்குவதே ROV இன் இலக்கு.

## தேர்தல் அதிகாரிகளின் கூட்டமைவு

தேர்தல் அதிகாரிகளை (தேர்தல் குறியீட்டில் தேர்தல் வாரியங்கள் என குறிப்பிடப்படுகிறது[18]) வாக்கு மையங்களில் ஊழியர்களாக ROV பணியமர்த்துவார். வாக்காளர்களை செயல்படுத்த தேவையான திறன்களை அதிகரிக்க தேர்தல் அதிகாரிகள் முடிந்தவரை பல வேறுபட்ட சமூகங்களைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள்.[19] வாக்கு மைய ஊழியர்கள் வாடிக்கையாளர் சேவையில் அனுபவம், இருமொழி திறன், பன்முகத்தன்மை மற்றும் உட்படுத்தல் திறன், தலைமைத்துவ குணங்கள், தொழில்நுட்ப திறன்கள் மற்றும் சமூக பங்களிப்பிற்கான குடிமை கடமையில் ஆர்வத்தை வெளிப்படுத்துவர்களாக இருக்க வேண்டும். புதிய வாக்கு மைய தொழில்நுட்பம், வாக்காளர்களை எவ்வாறு செயல்படுத்துவது, கூட்டக் கட்டுப்பாட்டு மேலாண்மை குறித்து அவர்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். கூடுதல் வாடிக்கையாளர் சேவை பயிற்சி தலைப்புகளில் மூத்தவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கான அணுகல், உட்படுத்தல் மற்றும் சரியான தகவல்தொடர்பு ஆகியவை அடங்கும். தகுதி மற்றும் சமூகத்தின் தேவைகளின் அடிப்படையில் சிறந்த ஆட்களை ROV தேர்ந்தெடுப்பார். முன்னாள் தேர்தல் அதிகாரிகளுக்கும் புதிய தன்னார்வ சாத்தியங்கள் குறித்து அறிவிக்கப்படும், மேலும் புதிய ஊழியர் தேவைகளை பூர்த்தி செய்தால் அவர்கள் நியமிக்கப்படலாம்.

தேர்தல் அதிகாரிகளின் கூட்டமைவு கூடுதல் உதவி கவுண்ட்டி ஊழியர்கள் மற்றும் உதவித்தொகை பெறும் தொண்டர்களின் கலவையாக இருக்கும். தலைவர்களும் மற்றும் எழுத்தர்களும் மணிநேர கவுண்ட்டி தொழிலாளர்களாக நியமிக்கப்படுவார்கள் மற்றும் பெரும்பாலும் உதவித்தொகை பெறும் தொழிலாளர்களே வரவேற்பாளர்களாக இருப்பார்கள் (எ.கா. முன்னாள் தேர்தல்

[18] தேர்தல் குறியீடு §4005

[19] தேர்தல் குறியீடு, பிரிவு 12, அத்தியாயம் 4 இன் சட்டப்பகுதி 1

அதிகாரிகள், உயர்நிலைப் பள்ளி மாணவர்கள்). அனைத்து வாக்கு மைய ஊழியர்களுக்கும் அவர்கள் பணிக்கு ஏற்ப பயிற்சி அளிக்கப்படும், மற்றும் அவர்கள் ஒரு நாளிலிருந்து (உதவித்தொகை பெறும் தொழிலாளர்கள்) பல நாட்கள் வரை, அல்லது அனைத்து தேர்தல் நடக்கும் நாட்களிலும் வேலை செய்வார்கள். ROV அவுட்ரீச் நிகழ்வுகளில் தேர்தல் ஊழியர்களுக்கான ஆட்சேர்ப்பும் நடக்கும், அங்கே அவர்கள் பூர்த்தி செய்து தரும் ஒரு விண்ணப்பம் ஒப்புதலுக்காக கவுண்ட்டியில் சமர்ப்பிக்கப்படும்.

வாக்கு மையத்தின் அளவு மற்றும் தேர்தல் தேதிக்கு அருகாமையின் அடிப்படையில் வாக்கு மையங்களுக்கான ஊழியர்கள் நியமிக்கப்படுவார்கள். ஒவ்வொரு வாக்கு மையத்திலும் ஆறு (6) முதல் பதினைந்து (15) தேர்தல் அதிகாரிகளை நியமிப்பதே திட்டம். தேர்தல் தேதி நெருங்கும் போது அதிக ஊழியர்கள் பெரிய வாக்கு மையங்களுக்கும், பரபரப்பான நேரங்களிலும் நாட்களிலும் ஈடுபடுத்தப்படுவார்கள். கவுண்ட்டியின் மொழித் தேவைகளை ஆதரிக்க முடிந்தவரை பல இருமொழித் தேர்தல் அதிகாரிகளை நியமிக்க முயற்சிக்கப்படும்.

## மின்னணு வாக்கெடுப்பு புத்தகங்கள் (ஈ-போல்புக்குகள்)

VCA இன் கீழுள்ள மாற்றங்களை திறம்பட செயல்படுத்த, மின்னணு-வாக்கெடுப்பு புத்தகங்களுடன் வாக்கு மையங்கள் புதுப்பிக்கப்படும்.[20] வாக்கு மையங்கள் மற்றும் ROV தேர்தல் தகவல் மேலாண்மை அமைப்பு (EIMS) ஆகியவற்றுக்கு இடையில் பாதுகாப்பான மின்னணு தகவல்தொடர்புகளை உறுதிப்படுத்தப் பயன்படுத்தப்படும் மின்னணு வன்பொருள் மற்றும் மென்பொருளின் கலவையே ஈ-போல்புக் எனப்படுகிறது. ROV EIMS பின்னர் VoteCal க்கு தகவல்களைத் தெரிவிக்கிறது. VoteCal என்பது மையப்படுத்தப்பட்ட மாநிலம் தழுவிய வாக்காளர் பதிவு தரவுத்தளமாகும் இது கவுண்ட்டி தேர்தல் மேலாண்மை அமைப்புகள் மற்றும் பிற மாநில அமைப்புகளான திருத்தங்கள் மற்றும் மறுவாழ்வுத் துறை, பொது சுகாதாரத் துறை மற்றும் மோட்டார் வாகனத் துறை போன்றவற்றுடன் சேர்ந்து செயலாற்றி மற்றும் தகவல்களைப் பரிமாறிக்கொள்கிறது. இந்த புதிய VCA தொழில்நுட்பம் மடிக்கணினி அல்லது டேப்லெட்டில் செயல்படும், ஆனால் இது "*கடினமாக்கப்படும்*"; அதாவது ROV மூலம் அங்கீகரிக்கப்பட்ட ஈ-போல்புக் மென்பொருள் <u>மட்டுமே</u> சாதனத்தில் இயங்கும்.

ஈ-போல்புக்குகளில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் மின்னணு பட்டியல் (ரோஸ்டர் அட்டவணை) உள்ளது, அவற்றை வாக்கு மையங்களில் கொண்டு சென்று பயன்படுத்தலாம். ரோஸ்டர் அட்டவணை என்பது தேர்தலில் வாக்களிக்க தகுதியான அனைத்து பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் அதிகாரப்பூர்வ பட்டியலாகும். இது வாக்காளரின் வாக்குச்சீட்டைப் பெறும் தகுதியை சரிபார்க்கவும், மற்றும் வாக்காளர்களின் வரலாற்றை நிகழ்நேரத்தில் கைப்பற்றி இரட்டை வாக்களிப்பைத் தடுக்கவும் முதன்மையாகப் பயன்படுத்தப்படுகிறது.

புதிய VCA மாதிரியின் கீழ், ஈ-போல்புக்குகள் பாதுகாப்பான பூட்டப்பட்ட நீர்ப்புகாத முறையில் பராமரிக்கப்பட்டு, மற்றும் இரண்டாவதாக பாதுகாப்பான பூட்டிய கூண்டுக்குள் கடுமையான பூட்டால் பூட்டப்படும் மற்றும் அதன் சாவியின்

---

[20] தேர்தல் குறியீடு §2183

அணுகல் தினசரி சேமிப்பிற்காக ஒதுக்கப்பட்ட பணியாளர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். இயக்க நேரங்களில், இந்த அலகுகளில் சேமிக்கப்பட்ட தரவு தொடர்ந்து புதுப்பிக்கப்படும். பாதுகாப்பான கிளவுடு சேவையகத்துடன் பாதுகாப்பான இணைப்பைப் பயன்படுத்தி அங்கீகரிக்கப்பட்ட பயனர்களை மட்டுமே உள்நுழைய அனுமதிக்கும் பயனர் அணுகலுடன் ஈ-போல்புக்குகள் நிரலாக்கப்பட்டுள்ளன. இந்த கிளவுடு சேவையகம் வாக்காளர் தரவிற்கான எந்தவொரு புதுப்பித்தல்களையும் அனுப்புவதற்காக, தரவுத்தளத்தையும் மற்றும் ROV இன் தேர்தல் தகவல் மேலாண்மை அமைப்புடன் உள்ள இணைப்பையும் பராமரிக்கிறது. ஈ-போல்புக்குகளில் உள்ள வாக்காளர் தரவின் பாதுகாப்பு குறித்த கூடுதல் தகவல்களை **வாக்களிப்பு பாதுகாப்பு** பிரிவில் **பகுதி 2: வாக்காளர் கல்வி மற்றும் அவுட்ரீச் திட்டத்தில்** காணலாம்.

பெயர், முகவரி, பிறந்த தேதி, விருப்பமான மொழி, கட்சி விருப்பம், தொகுதி மற்றும் அஞ்சல்-மூலம் வாக்களிப்பு நிலை உள்ளிட்ட வாக்காளர் பதிவு தரவை சரிபார்க்க ஈ-போல்புக்குகள் பயன்படுத்தப்படலாம். மேலும், ஈ-போல்புக்குகள் பின்வரும் வாக்காளர் தகவல்களை ஒருபோதும் சேமிக்காது: ஓட்டுநர் உரிம எண் அல்லது சமூக பாதுகாப்பு எண்ணைப் பற்றிய ஏதாவது குறிப்பு. ஈ-போல்புக்குகள் நிகழ்நேர தேடல் மற்றும் வாக்காளர் நிலை தகவல்களை வழங்குவதன் மூலம்; முக்கியமாக, வாக்காளர்களுக்கும் மற்றும் ROV தேர்தல் அதிகாரிகளுக்கும் சிறந்த வாக்களிக்கும் அனுபவத்தை வழங்குகின்றன.

# அவுட்ரீச்

## பொது ஆலோசனைகள்

தேர்தல் நிர்வாகத் திட்ட (EAP) செயல்பாட்டில் அனைவரையும் உட்படுத்தும் முயற்சியாக, Santa Clara கவுண்ட்டி பன்னிரண்டு (12) பொது ஆலோசனைக் கூட்டங்களை பின்வருமாறு நடத்தியது:

- பொது மக்களுடன் இரண்டு (2) கூட்டங்கள்:

| | | |
|---|---|---|
| பொதுவான<br>ஜூன் 12, 2019<br>2:00-3:30 pm | Santa Clara கவுண்ட்டி சமூக சேவைகள்<br>Room 116 | 379 Tomkins Ct.<br>Gilroy, CA 95020 |
| பொதுவான<br>ஜூலை 13, 2019<br>1:00-2:30 pm | வாக்காளர் பதிவாளர்<br>Auditorium | 1555 Berger Dr., Bldg 2<br>San Jose, CA 95112 |

- அணுகல் கவலைகள் உள்ள பொதுமக்களுடன் இரண்டு (2) கூட்டங்கள்:

| | | |
|---|---|---|
| அணுகல்<br>ஜூன் 13, 2019<br>5:00-7:00 pm | கவுண்ட்டி அரசு மையம்<br>Room 157 | 70 W. Hedding St.<br>San Jose, CA 95110 |
| அணுகல்<br>ஜூலை 10, 2019<br>11:00 am-12:30 pm | Silicon Valley இன்டிபென்டன்ட் லிவிங் சென்டர்<br>Board Room | 25 N. 14th St. Suite 1000<br>San Jose, CA 95112 |

- மொழி அணுகல் கவலைகள் உள்ள கவுண்ட்டியின் இலக்கு மொழி சமூகங்களில் உள்ள பொதுமக்களுடன் எட்டு (8) கூட்டங்கள்:

| | | |
|---|---|---|
| வியட்நாமிய<br>ஜூன் 17, 2019<br>6:30-8:00 pm | Tully San Jose கிளை நூலகம்<br>Community Room | 880 Tully Rd.<br>San Jose, CA 95111 |
| கெமர்<br>ஜூன் 18, 2019<br>5:30-7:00 pm | கவுண்ட்டி அரசு மையம்<br>Room 157 | 70 W. Hedding St.<br>San Jose, CA 95110 |
| டகலாக்<br>ஜூன் 21, 2019<br>4:30-6:00 pm | Milpitas நூலகம்<br>Auditorium | 160 N. Main St.<br>Milpitas, CA 95035 |
| ஸ்பானிஷ்<br>ஜூன் 24, 2019<br>4:00-5:30 pm | Mayfair சமூக மையம்<br>Lincoln Room | 2039 Kammerer Ave.<br>San Jose, CA 95116 |
| சீன<br>ஜூன் 25, 2019<br>5:30-7:00 pm | Quinlan சமூக மையம்<br>Social Room | 10185 N. Stelling Rd.<br>Cupertino, CA 95014 |
| கொரிய<br>ஜூன் 27, 2019<br>2:00-3:30 pm | வாக்காளர் பதிவாளர்<br>Auditorium | 1555 Berger Dr., Building 2<br>San Jose, CA 95112 |
| இந்தி<br>ஜூலை 8, 2019<br>7:30-9:00 pm | இந்திய சமூக மையம்<br>Gita & Ashok Vaish Room | 525 Los Coches St.<br>Milpitas, CA 95035 |
| ஜப்பானிய<br>ஜூலை 11, 2019<br>4:30-6:00 pm | Joyce Ellington கிளை நூலகம்<br>Community Room | 491 E. Empire St.<br>San Jose, CA 95112 |

ஒவ்வொரு கூட்டத்திற்கும் குறைந்தது 10 நாட்களுக்கு முன்னதாக EAP கூட்டங்களுக்கான அட்டவணை மற்றும் பொது அறிவிப்புகள் வலைத்தளத்தில் வெளியிடப்பட்டன. 70 W. Hedding Street, San Jose, CA 95110 இல் உள்ள Santa Clara கவுண்ட்டி அரசு மையத்திற்கு வெளியே பொது அறிவிப்புகள் ஒட்டப்பட்டன. Nextdoor, Facebook, Twitter, மற்றும் Instagram ஆகியவற்றை கூடுதலாக, கூட்டங்களை பற்றி விளம்பரப்படுத்த ROV பயன்படுத்தியது. பிற்சேர்க்கை H இல் EAP இன் வளர்ச்சி தொடர்பான கூட்டங்களுக்கான அனைத்து அறிவிப்புகளும் சேர்க்கப்பட்டுள்ளன.

EAP கூட்டங்களில், இலக்காக உள்ள தலைப்புகள் பின்வருபவை:

- சாத்தியமான வாக்கு மைய இடங்கள்
- சாத்தியமான வாக்குச்சீட்டை போடக்கூடிய இடங்கள்
- பல்வேறு மொழி அணுகல் தேவைகள்
- பல்வேறு வாக்காளர் அணுகல் தேவைகள்
- ஊடகங்கள் மற்றும் நிகழ்வுகள் மூலம் சமூக அவுட்ரீச் தொடர்பான பரிந்துரைகள்

கூட்டத்தில் வழங்கப்பட்ட பொருட்களில், வாக்கு மைய ஆட்சேர்ப்பு ஃப்ளையர் மற்றும் சாத்தியமான வாக்கு மையங்களுக்கு தேவையான தகவல்களையும்

பரிந்துரைகளையும் சேகரிக்க உதவும் தள தேர்வு கணக்கெடுப்பு (பிற்சேர்க்கை I இல் காட்டப்பட்டுள்ளது) ஆகியவை அடங்கும். கூட்டங்களிலிருந்து கிடைத்த அனைத்து உள்ளீடுகளும் கூட்ட நடவடிக்கை குறிப்பேடில் ஆவணப்படுத்தப்பட்டுள்ளன (பிற்சேர்க்கை J).

## தேர்தல் நிர்வாகத் திட்டம் (EAP) மேம்பாட்டு காலக்கெடு[21]

| | |
|---|---|
| EAP இன் முன்மொழியப்பட்ட வரைவை வெளியிட | ஆகஸ்டு 16, 2019 |
| வரைவு EAP குறித்து தெரிவிக்க 14 நாள் பொது கருத்துரை காலம் | ஆகஸ்டு 16, 2019-லிருந்து ஆகஸ்டு 30, 2019 வரை |
| வரைவு EAP ஐ பரிசீலிக்கும் விசாரணைக்காக 10-நாள் பொது அறிவிப்பை வெளியிட | ஆகஸ்டு 20, 2019 |
| வரைவு EAP ஐ கருதும் முதல் பொது விசாரணை | ஆகஸ்டு 30, 2019<br>5:30-7:30 pm<br>70 W. Hedding Street<br>San Jose, CA 95110<br>மேற்பார்வையாளர்களின் வாரியத்தின் அறைகள் |
| வரைவு EAP ஐ கருதும் இரண்டாவது பொது விசாரணை | செப்டம்பர் 4, 2019<br>6-8 pm<br>70 W. Hedding Street<br>San Jose, CA 95110<br>மேற்பார்வையாளர்களின் வாரியத்தின் அறைகள் |
| பொது விசாரணைக்கு பின்னர் வரைவு EAP ஐ திருத்துவதற்கான காலம் | ஆகஸ்டு 30, 2019 -லிருந்து செப்டம்பர் 18, 2019 வரை |
| திருத்தப்பட்ட EAP ஐ அனைத்து மொழிகளிலும் வெளியிட | அக்டோபர் 11, 2019 |
| திருத்தப்பட்ட EAP குறித்து தெரிவிக்க 14 நாள் பொது கருத்துக் காலம் | அக்டோபர் 11, 2019 லிருந்து அக்டோபர் 25, 2019 வரை |
| இறுதி EAP ஐ ஏற்றுக்கொண்டு வெளியிட | நவம்பர் 15, 2019 |
| EAP இன் வாக்காளர் கல்வி மற்றும் அவுட்ரீச் பகுதி ஒப்புதலுக்காக மாநில செயலாளரிடம் சமர்ப்பிக்கப்ப. | நவம்பர் 15, 2019 |

## பொது அறிவிப்புகள்

இரண்டு நேரடி அஞ்சல்கள் மூலம், அனைத்து வாக்காளர்களும் அஞ்சல்-மூலம் வாக்களிக்கும் வாக்குச்சீட்டைப் பெறுவார்கள் என்று பொதுமக்களுக்கு அறிவிக்கப்படும். அனைவருக்குமே அஞ்சல்-மூலம் அனுப்பும் வாக்குச் சீட்டு முறையில் தேர்தல் நடத்தப்படும் என்பதையும், வாக்காளர்கள் தங்களது வாக்குச்சீட்டை பின்வரும் மூன்று வழிகளில் ஒன்றில் வாக்களிக்கலாம் என்பதையும் அறிவிப்புகள் தெரிவிக்கும்: அஞ்சல் மூலம் (அஞ்சல் கட்டணம்

[21] காலக்கெடு மதிப்பீடு மற்றும் மாற்றத்திற்கு உட்பட்டது.

செலுத்தப்பட்டு), கவுண்ட்டியில் உள்ள எந்த வாக்குச்சீட்டை போடும் இடத்திலும், அல்லது எந்த வாக்கு மையத்திலும். வாக்கு மையங்கள் மற்றும் வாக்குச்சீட்டை போடும் இடங்கள் திறந்திருக்கும் தேதிகள், இடங்கள் மற்றும் மணிநேரங்களை வாக்காளர்கள் அணுகக்கூடிய இணையையும், அணுகக்கூடிய வடிவத்தில் அஞ்சல்-மூலம் வாக்களிக்கும் வாக்குச்சீட்டைக் கோருவதற்கான காலக்கெடுவும் இந்த அறிவிப்புகளில் தெரிவிக்கப்படும், மற்றும் அது ஆங்கிலம் தவிர வழங்கப்படும் எட்டு மொழிகளில் ஒன்றிலும் வழங்கப்படும். நேரடி அஞ்சல்களில் வழங்கப்பட்ட கூடுதல் தகவல்களில் பின்வருவன அடங்கும்: வசிப்பிடத்திற்கான உறுதிப்படுத்தல் மற்றும் வாக்காளர் தகவல் சரிபார்ப்பு, வணிக பதில் அஞ்சல், முக்கியமான வாக்கு மைய தகவல், கவுண்ட்டி மற்றும் மாநில வாக்காளர் தகவல் வழிகாட்டி விவரங்கள் மற்றும் பெயர் மற்றும்/அல்லது கட்சி விருப்பத்தை புதுப்பிப்பதற்கான வழிமுறைகள் பற்றிய உள்ளடக்கங்கள். இந்த அறிவிப்புகள் வாக்காளர்களுக்கு ROV வலைத்தளம், தொலைபேசி எண்கள் மற்றும் உதவி கோருவதற்கான கட்டணமில்லா ஹாட்லைன் (866) 430-VOTE ஆகியவற்றின் இணையையும் வழங்கும்

நேரடி அஞ்சல்களின் முதல் தொகுப்பு தேர்தலுக்கு சுமார் 90 நாட்களுக்கு (E-90) முன்னர் அனுப்பப்படும், அடுத்த தொகுப்பு தேர்தலுக்கு சுமார் 29 நாட்களுக்கு முன்னர் (E-29) அனுப்பப்படும்.

தேர்தல் குறியீட்டில் தேவைப்படும் இரண்டு நேரடி அஞ்சல்களுடன் கூடுதலாக, தாமதமாக பதிவுசெய்த மற்றும் கவுண்ட்டி வாக்காளர் தகவல் வழிகாட்டியைப் பெறாத வாக்காளர்களுக்கான மூன்றாவது அஞ்சலையும் ROV தயாரிக்கிறது. இந்த நேரடி அஞ்சல்களின் தொகுப்பு தேர்தலுக்கு சுமார் 15 முதல் 10 நாட்களுக்கு முன்னர் அஞ்சலில் அனுப்பப்படும். VCA தொடர்பான அனைத்து பொது அறிவிப்புகளும் தகவல்களும் ROV வலைத்தளத்தில் அணுகக்கூடிய வடிவத்தில் வெளியிடப்படும்.

## மொழி அணுகல் மற்றும் வாக்களிப்பு அணுகல் ஆலோசனைக் கமிட்டிகள்

உள் செயல்முறை மேம்பாடு, பங்குதாரரர் மற்றும் பொது உள்ளீடு ஆகியவற்றின் ஒருங்கிணைந்த செயல்முறை மற்றும் வாக்காளர் தேர்வுச் சட்டத்தை (VCA) ஏற்றுக்கொண்ட கவுண்ட்டிகளிடம் இருந்து வந்த கருத்துக்களின் அடிப்படையில், Santa Clara கவுண்டி வாக்காளர் பதிவாளர் (ROV) இரண்டு ஆலோசனைக் கமிட்டிகளை அமைத்துள்ளார். முதல் கமிட்டி மொழி அணுகல் ஆலோசனைக் கமிட்டி (LAAC) ஆகும், இது ஆங்கிலத்தைத் தவிர வேறு மொழியை பிரதானமாக பேசும் வாக்காளர்களிடம் இருந்து, வாக்கு மைய மாதிரி மூலம் சிறப்பாக சேவை செய்யக்கூடிய வழிகளை பற்றிய உள்ளீட்டை முதன்மையாக கோரும். இரண்டாவது கமிட்டி வாக்களிப்பு அணுகல் ஆலோசனைக் கமிட்டி (VAAC) ஆகும், இது வாக்காளர்களிடமிருந்து அணுகல் கவலைகள், மூத்தவர்கள் அல்லது மாற்றுத்திறனாளி வாக்காளர்கள் போன்றவர்களிடமிருந்து அவர்களின் வாக்களிக்கும் தேவைகள் மற்றும் கவலைகள் கவனிக்கப்படுவதை உறுதிசெய்ய தேவையான உள்ளீடுகளை கோரும்.

நெட்வொர்க்கிங் மற்றும் இலாப நோக்கற்ற மற்றும் சமூக அடிப்படையிலான நிறுவனங்கள் முதல் Santa Clara கவுண்டியில் உள்ள நகராட்சிகள் வரை பல்வேறு தொடர்புகளின் கூட்டு முயற்சி மூலம் இந்த கமிட்டிகளின் உறுப்பினர்கள் நியமிக்கப்படுவார்கள். கமிட்டிகளை நிறுவுவதற்கும் ஒவ்வொரு கமிட்டியின் குறிக்கோள்களையும் தீர்மானிக்கவும் LAAC மற்றும் VAAC இரண்டின் முதல் கூட்டங்கள் பயன்படுத்தப்பட்டன. ஒவ்வொரு கமிட்டியின் முதல் சில கூட்டங்களின் தேதி, நேரம் மற்றும் நடந்த இடங்கள் கீழே உள்ளன:

| **மொழி அணுகல் ஆலோசனைக் கமிட்டி (LAAC)** | | |
|---|---|---|
| **தேதி** | **இடம்** | **நேரம்** |
| ஜூன் 5, 2019 | Sobrato இலாப நோக்கற்ற மையம்<br>1400 Parkmoor Ave., San Jose, CA 95126 | 3:00 – 5:00 pm |
| ஜூன் 19, 2019 | Sobrato இலாப நோக்கற்ற மையம்<br>1400 Parkmoor Ave., San Jose, CA 95126 | 3:00 – 5:00 pm |
| ஜூலை 17, 2019 | Sobrato இலாப நோக்கற்ற மையம்<br>1400 Parkmoor Ave., San Jose, CA 95126 | 2:00 – 4:00 pm |

| **வாக்களிப்பு அணுகல் ஆலோசனைக் கமிட்டி (VAAC)** | | |
|---|---|---|
| **தேதி** | **இடம்** | **நேரம்** |
| ஜூன் 7, 2019 | ROV Auditorium<br>1555 Berger Dr. Bldg. 2, San Jose, CA 95112 | 3:00 – 5:00 pm |
| ஜூன் 18, 2019 | ROV Auditorium<br>1555 Berger Dr. Bldg. 2, San Jose, CA 95112 | 3:00 – 5:00 pm |
| ஜூலை 16, 2019 | Silicon Valley இன்டிபென்டன்ட் லிவிங் சென்டர்<br>Board Room<br>25 N. 14th St., Suite 1000, San Jose, CA 95112 | 10:00 am – 12:00 pm |

அனைத்து LAAC மற்றும் VAAC கூட்டங்களின் பட்டியல்களும் ROV வலைத்தளமான www.sccvote.org/voterschoice இல் வெளியிடப்பட்டு பராமரிக்கப்படும். LAAC கூட்டங்களின் நிகழ்ச்சி நிரல்கள் மற்றும் நடவடிக்கை குறிப்பேடுகளை பிற்சேர்க்கை K இல் காணலாம் மற்றும் VAAC கூட்ட நிகழ்ச்சி நிரல்கள் மற்றும் நடவடிக்கை குறிப்பேடுகள் பிற்சேர்க்கை L இல் உள்ளன.

# பகுதி 2 - வாக்காளர் கல்வி மற்றும் அவுட்ரீச் திட்டம்

VCA ஐ செயல்படுத்தும் எந்த கவுண்ட்டியும், வாக்காளர் கல்வி சட்டம் மற்றும் VCA இன் வழிவகைகளைப் பற்றி வாக்காளர்களுக்குத் தெரிவிக்கும் வாக்காளர் கல்வி மற்றும் அவுட்ரீச் திட்டத்தையும் செயல்படுத்த வேண்டும் என்று வாக்காளர் தேர்வுச் சட்டம் (VCA) கட்டாயப்படுத்துகிறது. மேலும் குறிப்பாக, ஆங்கிலத்தைத் தவிர வேறு ஒரு மொழியை பிரதானமாக பேசும் வாக்காளர்களுக்கும், மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்கும், கிடைக்கக்கூடிய சேவைகளைப் பற்றி சமூகங்களுக்கு அறிவுறுத்துவதை இலக்காக வைத்து செயல்பட வேண்டுமென்றும் சட்டத்தில் கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

Santa Clara கவுண்ட்டி வாக்காளர் பதிவாளரிடம் (ROV) ஏற்கனவே ஒரு அவுட்ரீச் குழு மற்றும் திட்டம் உள்ளது, மேலும் சமூக இருப்பைப் பராமரிப்பதற்கும், வாக்காளர் பதிவு சேவைகள் மற்றும் பொது வாக்காளர் கல்வியை வழங்குவதற்கும் ஆண்டு முழுவதும் அவர்கள் பல நிகழ்வுகளில் கலந்துக்கொள்கின்றனர். EAP-யின் இந்த வாக்காளர் கல்வி மற்றும் அவுட்ரீச் பிரிவு, VCA பற்றி பொதுமக்களுக்கு அறிவுறுத்துவதற்காக, ROV இன் தற்போதைய அவுட்ரீச் முறைகளை எவ்வாறு பயன்படுத்தவேண்டும் மற்றும் சமூகங்களை சென்றடைய அதை புதிய வழிகளுடன் எவ்வாறு இணைக்கவேண்டும் என்பதைக் கோடிட்டுக் காட்டுகிறது. சமூக கூட்டாண்மைகளை அதிகரித்தல், குடிமை ஈடுபாட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்துதல் மற்றும் வாக்காளர் மைய மாதிரி மூலம் வாக்காளர் அனுபவத்தை மேம்படுத்துதல் ஆகிய குறிக்கோள்களுடன் அவுட்ரீச் நடவடிக்கைகள் வடிவமைக்கப்படும்.

## <u>பிரிவு 1: வாக்காளர் தொடர்பு - பொதுவானவை</u>

கடந்த காலங்களில் ROV கலந்துகொண்டு நடத்திய நிகழ்வுகளுடன் கூடுதலாக, முடிந்தவரை மாவட்டத்தின் புள்ளிவிவரங்களை உள்ளடக்கும் வகையில் வாக்காளர் கல்வி மற்றும் அவுட்ரீச் திட்டமிடப்பட்டுள்ளது. வரலாற்று ரீதியாக குறைந்த மக்கள்தொகை கொண்ட சமூகங்களை சென்றடைவதற்கான திட்டங்கள் உள்ளன.

மூத்தவர் சமூகங்கள், இன/மொழி சமூகங்கள், இளைஞர் சமூகங்கள், மாணவர் சமூகங்கள், குறைந்த சேவைகள் உள்ள சமூகங்கள் மற்றும் அண்டை குழுக்கள் ஆகிய சில சமூகங்களை ROV தொடர்பு கொண்டு சேர்க்க திட்டமிட்டுள்ளது 100 க்கும் மேற்பட்ட சமூக அடிப்படையிலான நிறுவனங்கள் (CBOக்கள்) தங்கள் சமூகங்களுக்கு வழங்கும் பணிகள் பற்றியும், ROV இன் அவுட்ரீச் குழு அதில் எவ்வாறு பங்கேற்கலாம் என்பதைப் பற்றி அறியவும் ROV திட்டமிட்டுள்ளது. வெற்றிகரமான வாக்காளர் கல்வித் திட்டத்தை உறுதி செய்வதற்காக CBOக்கள் மற்றும் அனைத்து சமூகங்களுடனும் இணைந்து செயல்படுவதே இதன் குறிக்கோள்.

### ஊடகத்தின் பயன்பாடு

வாக்கு மைய மாதிரி, அஞ்சல்-மூலம் வாக்களிப்பு செயல்முறை, முன்னதான வாக்களிப்பு விருப்பங்கள் மற்றும் 2019 இல் கோடைகாலத்தின் பிற்பகுதியில் அல்லது இலையுதிர்கால தொடக்கத்தில் தொடங்கும் ஊடக பிரச்சாரத்தில் வாக்கு மையத்தில் பணியாற்றுவதற்கான வாய்ப்புகள் பற்றிய தகவல்களை ROV

வழங்கும். தேர்தல் மாதிரியில் வரவிருக்கும் மாற்றத்தைப் பற்றி பொதுமக்களுக்குக் கற்பிப்பதற்கான முயற்சியில் இந்த பிரச்சாரம் ஒரு குறிப்பிடத்தக்க முதலீடாகவும் மற்றும் ROV வரலாற்றில் மிகப்பெரிய விளம்பர பணியாகவும் உள்ளது. ஊடகங்களில் பின்வருவன அடங்கும், ஆனால் அவற்றுடன் மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை:

1. உள்ளூர் தொலைக்காட்சி மற்றும் சமூக கேபிள் நிலையங்கள்
    a. Comcast
    b. Univision
    c. Telemundo
    d. Namaste TV
    e. Crossing TV
2. செய்தித்தாள்கள் (பிராந்திய மற்றும் சமூகம்)
    a. The Mercury News
    b. Metro
    c. Morgan Hill Times
    d. Gilroy Dispatch
    e. El Observador
    f. Epoch Times
    g. India West
    h. Korea Times
    i. Nichi Bei Weekly
    j. Philippine News
    k. San Jose State Spartan Daily
    l. Santa Clara University Newspaper
    m. Stanford Daily
    n. Viet Nam Daily
    o. World Journal
    p. N & R
    q. China Press
    r. JWeekly
    s. Spotlight
    t. Bayspo Magazine
    u. Daily Post
    v. India Current
3. வானொலி
    a. KBAY/KEZR
    b. KFOX
    c. KRTY/KLIV
    d. Sound of Hope
    e. Sing Tao
    f. Univision
    g. Vien Thao
    h. Celina Rodriguez
    i. China Press
    j. Radio Zindagi
4. ROV மற்றும் கவுண்ட்டிக்காக சமூக ஊடகங்கள் மற்றும் வலைத்தளங்களின் பயன்பாடு
    a. ROV Facebook பக்கம்: https://www.facebook.com/sccvote
    b. கவுண்ட்டி Facebook பக்கம்: https://www.facebook.com/county.of.santa.clara

c. ROV Twitter: https://twitter.com/sccvote
d. கவுண்ட்டி Twitter: https://twitter.com/SCCgov
e. ROV Instagram: www.instagram.com/sccvote
f. Nextdoor பயன்பாடு: (Santa Clara கவுண்ட்டியின் தகவல்தொடர்பு மற்றும் ஊடகத்தை தேடவும்)
g. கவுண்ட்டி செய்திமடல் சந்தா பட்டியல்கள்

5. ROV YouTube: https://www.youtube.com/sccvote
6. பள்ளத்தாக்கு போக்குவரத்து ஆணைய பேருந்துகளில் பொதுமக்கள் செல்லும் வழிகளில் செய்தி பரப்புதல்
7. Santa Clara கவுண்ட்டியில் அமைந்துள்ள முக்கிய லீக் விளையாட்டு உரிமையாளர்கள் மூலம் விளம்பரங்கள்
8. மோட்டார் வாகனத் துறை கிளை அலுவலகங்களில் டிவி மானிட்டர் மூலம் விளம்பரங்கள்
9. சமூக கூட்டாண்மைகள், மாற்றுத்திறனாளிகளுக்கான வக்கீல் அமைப்புகள், தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள், சிறப்பு மாவட்டங்கள், பள்ளி மாவட்டங்கள், சமூகம் சார்ந்த நிறுவனங்கள் மற்றும் நாடு முழுவதும் உள்ள நம்பிக்கை-சார்ந்த அமைப்புகள் போன்ற குழுக்களுடன் பொருட்களின் பகிர்வு
10. கிடைக்கக்கூடிய விற்பனை நிலையங்களில் செய்யப்படும் விளம்பர பிரச்சாரத்திற்கு ஆதரவாக மற்றும் கூடுதலாக பொது சேவை அறிவிப்புகள் (PSAக்கள்) பயன்படுத்தப்படும். இந்த PSAக்கள் VCA பற்றிய பொதுவான தகவல்கள், VCA பற்றிய மொழி-குறிப்பிட்ட தகவல்கள் மற்றும் கட்டணமில்லா மொழி உதவி ஹாட்லைன் மற்றும் வாக்கு மையங்களில் உள்ள அணுகல் விருப்பங்கள் மற்றும் தொலைநிலையிலிருந்து அணுகக்கூடிய அஞ்சல்-மூலம் வாக்களிப்பு ஆகிய தலைப்புகளை பற்றி பரப்பும்.

வரவிருக்கும் தேர்தலை பற்றி வாக்காளர்களுக்கு தெரிவிப்பதற்காக ROV ஆடியோ மற்றும் காட்சி ஊடகங்களையும் பயன்படுத்துவார்கள், மற்றும் அவை அணுகக்கூடிய வடிவங்களில் பரவலாக விநியோகிக்கப்படும். காது கேளாதவர்கள் அல்லது கேட்க முடியாதவர்கள், மற்றும் பார்வையற்றவர்கள் அல்லது பார்வைக் குறைபாடுள்ளவர்கள் போன்ற குறைபாடுகள் உள்ள வாக்காளர்கள் உட்பட அனைத்து கவுண்ட்டி வாக்காளர்களையும் சென்றடைவதே இதன் குறிக்கோள்.

## சமூக இருப்பு திட்டம் மற்றும் வாக்காளர் கல்வி பொருட்கள்

ROV ஆண்டு முழுவதும் நூற்றுக்கணக்கான சமூக நிகழ்வுகளில் தொடர்ந்து பங்கேற்கிறது. தேர்தல்கள் நடத்தப்படுவதில் உள்ள மாற்றத்தை வாக்காளர்களுக்கு தெரிவிக்க, பல்வேறு அவுட்ரீச் நிகழ்வுகளில் VCA தகவல்களும் சேர்க்கப்படுகின்றன. CBOக்களுடன் சேர்ந்து, புதிய வாக்களிப்பு மாதிரியை தங்கள் சமூகங்களுக்கு எவ்வாறு சிறந்த முறையில் தெரிவிப்பது என்பது குறித்தும் ROV தீவிரமாக செயல்பட்டு வருகிறது. வாக்காளர் கல்வியை எளிதாக்க அறிவுறுத்தல் பொருட்கள் மற்றும் விளக்க ஊழியர்கள் கிடைக்கிற மாதிரி செய்யப்படுகிறது.

வரவிருக்கும் வாக்கு மைய மாதிரியைப் பற்றி அறிந்த நிறுவனங்களுக்கு ஏற்கனவே விளக்கக்காட்சிகள் காட்டப்பட்டுவிட்டன, மற்றும் அவர்கள் மேலும் கற்க விரும்பினர், உதாரணத்திற்கு பின்வருவனபவை போன்றதை பற்றி:

- மகளிர் வாக்காளர்களின் கழகம் Cupertino-Sunnyvale
- மகளிர் வாக்காளர்களின் கழகம் Mountain View-Los Altos
- ஜனநாயக 21ஆம் நூற்றாண்டு கிளப்
- மகளிர் கொள்கை அலுவலகம்
- தென் கவுண்ட்டி ஜனநாயகக் கழகம்
- Almaden Valley சமூக சங்கம்
- Santa Clara கவுண்ட்டி கல்வி அலுவலகம்
- API நீதி கூட்டணி
- பெண்களின் சமத்துவம் 2020 தலைமைத்துவ சபை
- Silicon Valley சமூக அறக்கட்டளை(SVCF) மற்றும் Silicon Valley லாப நோக்கற்ற சபையின்(SVCN) சமூக ஈடுபாட்டு மதிய உணவு
- Orchard City பிரிக்க முடியாதது
- பாரம்பரியமற்ற விஷயங்களில் சாதிக்கும் பெண்கள்
- CalWORKs வேலைவாய்ப்பு சேவைகள் அலுவலகம்

ஒரு VCA தொடக்க கூட்டம் நடத்தப்பட்டது, மற்றும் அதில் பல்வேறு வழிகளில் ROV க்கு உதவுவதில் ஆர்வமுள்ள முப்பதுக்கும் மேற்பட்ட CBOக்கள் கலந்து கொண்டனர். ROV இன் குறிக்கோள், கவுண்ட்டியில் வாக்கு மைய மாதிரி பற்றி கற்பிக்க ROV க்கு உதவ ஆர்வமுள்ள அனைத்து CBOக்களுக்கும் பயிற்சி அளிப்பதாகும்.

இதை எழுதும்போது, பிற சமூகத்தை ஈடுபடுத்தும் ஏற்பாடுகள் தற்போது திட்டமிடல் செயல்பாட்டில் உள்ளன. இதற்கிடையில், வாக்கு மைய ஆட்சேர்ப்பு ஃபிளையர்கள் மற்றும் VCA விளக்கக்காட்சிகள் போன்ற பொதுமக்களுக்கான பொருட்களை ROV தொடர்ந்து உருவாக்கி வருகிறது, இது அனைத்து நிறுவனங்களுக்கும் மற்றும் தங்கள் சொந்த சமூகங்களுக்கு கற்பிப்பதில் ஆர்வமுள்ள தனிநபர்களுக்கும் விநியோகிக்கப்படும். சமூக மேம்பாட்டுத் திட்டம் பற்றிய கூடுதல் விவரங்களை பிற்சேர்க்கை M இல் காணலாம்.

## நேரடி அஞ்சல்கள்

வரவிருக்கும் தேர்தலை பற்றி வாக்காளர்களுக்கு தெரிவிக்கவும் மற்றும் கட்டணமில்லா வாக்காளர் உதவி ஹாட்லைனான (866) 430-VOTE ஐ ஊக்குவிக்கவும், Santa Clara கவுண்ட்டியில் பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு வாக்காளரையும் ROV இரண்டு (2) தனி அஞ்சல்கள் மூலம் தொடர்புகொள்ளும். புதிய தேர்தல் மாதிரி, வரவிருக்கும் தேர்தல், இந்த மாற்றங்களைப் பற்றிய கூடுதல் தகவல்கள் எங்கே கிடைக்கும் மற்றும் வாக்கு மையங்கள் மற்றும் வாக்குச்சீட்டை போடும் இடங்கள் திறந்திருக்கும் தேதிகள், இடங்கள் மற்றும் மணிநேரங்களை பற்றி தெரிய அணுகவேண்டிய இணை பற்றி வாக்காளர்களுக்கு தெரிவிக்கும் தகவல்களை இந்த அஞ்சல்கள் வழங்கும். நேரடி அஞ்சல்களில் வழங்கப்பட்ட கூடுதல் தகவல்களில், வசிப்பிடத்திற்கான உறுதிப்படுத்தல் மற்றும் வாக்காளர் தகவல் சரிபார்ப்பு, வணிக பதில் அஞ்சல், முக்கியமான வாக்கு மைய தகவல், கவுண்ட்டி மற்றும் மாநில வாக்காளர் தகவல் வழிகாட்டி விவரங்கள் மற்றும் பெயர் மற்றும்/அல்லது கட்சி விருப்பத்தை புதுப்பிப்பதற்கான வழிமுறைகள் பற்றிய உள்ளடக்கங்கள் வழங்கப்படும். மூன்றாவது அஞ்சல் தாமதமாக பதிவுசெய்யும் மற்றும் கவுண்ட்டி வாக்காளர் தகவல் வழிகாட்டியைப் பெறாத வாக்காளர்களுக்காக இருக்கும் மூன்று அஞ்சல்களில் ஒன்றில், வாக்காளர்கள் தங்கள் வாக்காளர் பதிவில் குறிப்பிட்ட

தகவல்களைப் புதுப்பிக்க அனுமதிக்கும் வசிப்பிட பேனலும் சேர்க்கப்பட்டிருக்கும்.

### ROV வலைத்தளத்தில் வாக்காளர் கல்வி வளங்கள்

வாக்காளர் தேர்வுச் சட்ட தகவல் உட்பட அனைத்து ROV இன் அவுட்ரீச் வாக்காளர் கல்விப் பொருட்களும் ROV இன் வலைத்தளத்தில் மின்னணு வடிவத்தில் கிடைக்கும். மார்ச் 2020 அதிபர் முதன்மை தேர்தலுக்கு முன்பு, ROV வலைத்தளத்தில் பின்வரும் தகவல்கள் இருக்கும்:

- VCA பற்றிய பொதுவான தகவல்கள்
- வாக்கு மையம் மற்றும் வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸ் இடங்கள் மற்றும் பணி நேரங்கள்
- ROV இன் கட்டணமில்லா வாக்காளர் உதவி ஹாட்லைன்
- EAP ஆவணம்
- VCA விளம்பர பொருட்கள்
- VCA கல்வி வீடியோக்கள் மற்றும் விளக்கக்காட்சிகள்
- அவுட்ரீச் மற்றும் கருத்தரங்கு அட்டவணைகள்
- VCA-தொடர்பான வரைபடங்கள்

## பிரிவு 2: வாக்காளர் தொடர்பு - மொழி சிறுபான்மை சமூகங்கள்

ஆங்கிலத்தைத் தவிர வேறு மொழியை பிரதானமாக பேசும் வாக்காளர்களுக்காக வாக்கு மைய மாதிரி சிறப்பாக சேவை செய்யும் வழிகளை பற்றிய உள்ளீடை சிறுபான்மை மொழி சமூகங்களிடமிருந்து பெற, வாக்காளர் பதிவாளர் (ROV) ஜூன் 5, 2019 அன்று ஒரு மொழி அணுகல் ஆலோசனைக் கமிட்டியை (LAAC) நிறுவினார். இந்த கமிட்டி வாக்கு மைய இடங்களின் பல்வேறு அம்சங்கள் குறித்தும், வழங்கப்படும் அல்லது வழங்கப்பட வேண்டிய அம்சங்கள் மற்றும் சேவைகள் குறித்தும் கருத்துக்களை வழங்கும். இந்த கமிட்டி 2020 தேர்தல் சுழற்சிகள் முழுவதிலும் சமூகத்தின் உள்ளீட்டை கேட்கும் ஒரு வழிமுறையாக அமலில் இருக்கும்.

### மொழி சிறுபான்மை சமூகங்களை அடையாளம் காணுதல்

Santa Clara கவுண்ட்டியில் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் விருப்பமான மொழி கோரிக்கைகளின் அடிப்படையில் மொழி சிறுபான்மை சமூகங்களை அடையாளம் காண முடியும் இந்த தகவலைப் பயன்படுத்தி, மக்கள் தொகை கணக்கெடுப்பு தகவல்கள் மற்றும் பொதுவில் கிடைக்கக்கூடிய பிற புள்ளிவிவரத் தகவல்களுடன் இணைந்து, மொழி ஆதிக்கம் அதிகமுள்ள பகுதிகளின் வரைபடத்தை ROV உருவாக்கியுள்ளது. திட்டமிடப்பட்ட வாக்காளர் கல்வி மற்றும் அவுட்ரீச்சின் ஒரு பகுதியாக இந்த இடங்களை குறிவைப்பதற்கு அவுட்ரீச் பயன்படுத்தப்படும். கலந்துகொள்ள பயனுள்ளதாக இருக்கும் பிற அணுகுமுறைகள் மற்றும் சமூக நிகழ்வுகளை அடையாளம் காண ROV பல்வேறு மொழி சிறுபான்மை சமூகங்களிடமிருந்து உள்ளீடுகளை கோருகிறது.

## சேவை அளிக்கப்பட வேண்டிய மொழி சிறுபான்மை சமூகங்கள்

ROV ஆங்கிலம் உட்பட ஒன்பது (9) மொழிகளில் சேவைகளை வழங்குகிறது. ஐந்து மொழிகள் கூட்டாட்சியில் கட்டாயமாக்கப்பட்டுள்ளன: ஆங்கிலம், சீன, ஸ்பானிஷ், டகலாக் மற்றும் வியட்நாமிய. இரண்டு மொழிகள் மாநிலத்தில் கட்டாயமாக்கப்பட்டுள்ளன: கெமர் மற்றும் கொரிய. மீதமுள்ள இரண்டு மொழிகளான இந்தி மற்றும் ஜப்பானிய மொழிகள் வரலாற்று ரீதியாக ROV ஆல் வழங்கப்பட்டுள்ளன, ஏனெனில் இந்த சமூகங்கள் கவுண்ட்டியில் அதிக அளவில் உள்ளன. அதிகாரப்பூர்வ வாக்குச்சீட்டுகள், நிபந்தனை வாக்காளர் பதிவு, தற்காலிக வாக்குச்சீட்டு உறைகள் மற்றும் வாக்கு மையத்தின் மற்றும் வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸின் அனைத்து அடையாளக் குறிகள் ஆகியவை அனைத்து ஒம்பது மொழிகளிலும் மொழிபெயர்க்கப்படும். முன்பு நடைமுறையில் இருந்தபடியே, கவுண்ட்டி வாக்காளர் தகவல் வழிகாட்டிகள் (CVIGகள்) கூட்டாட்சியில் கட்டாயமாக்கப்பட்ட நான்கு மொழிகளில் கிடைக்கும். கூடுதலாக, கான்டோனீஸ், ஃபார்ஸி, குஜராத்தி, நேபாளி, போர்த்துகீசியம், பஞ்சாபி, ரஷ்ய, சிரியாக், தமிழ், தெலுங்கு மற்றும் தாயி போன்ற பிற மொழிகள் மற்றும் பேச்சுவழக்குகளுக்கு உதவுதற்காக இருமொழி வாக்கு மைய ஊழியர்கள் கிடைக்கலாம். குறிப்பிட்ட மொழி சமூகங்களை கணித்து மற்றும் இலக்கு வைப்பதன் மூலம், பல்வேறு சமூகங்களில் இருமொழி தேர்தல் அதிகாரிகளின் வடிவத்தில் பொருத்தமான மொழி ஆதரவை வழங்குவதே ROV இன் நோக்கம். சமீபத்திய தேர்தல்களில் முடிந்தவரை பல மொழிகளை ஆதரிக்க முயற்சிக்கும் நடைமுறை பயன்படுத்தப்பட்டது, எனவே இந்த மொழி சமூகங்களில் இருந்து செய்யப்படும் பாரம்பரிய நியமனங்களுடன் கூடுதலாக, முன்னாள் தேர்தல் அதிகாரிகளையும் ROV அணுகும்.

## மொழி சிறுபான்மை சமூகங்களுக்கான வாக்காளர் கல்வி கருத்தரங்கு

முன்னர் குறிப்பிட்ட ஒன்பது (9) மொழிகளில் இருமொழி வாக்காளர் கல்வி கருத்தரங்குளை ROV வழங்கும். இந்த கருத்தரங்குகள் Santa Clara கவுண்ட்டியில் உள்ள மொழி சமூகங்களுக்கு வாக்கு மையம் மாதிரி செயல்முறை பற்றிய தகவல்களைப் பெறுவதற்கான வாய்ப்பை வழங்கும், கூடுதலாக ஒவ்வொரு குறிப்பிட்ட மொழியிலும் கிடைக்கும் பொருட்கள் மற்றும் உதவியை பற்றியும் தெரிவிக்கும். கருத்தரங்கு நடைபெறும் இடங்கள் மற்றும் தேதிகளைத் தேர்ந்தெடுக்க மொழி அணுகல் ஆலோசனைக் கமிட்டி (LAAC) உறுப்பினர்களிடமிருந்து கிடைக்கும் உள்ளீட்டை ROV பயன்படுத்தும், மேலும் அனைத்து கருத்தரங்குகளிலும் பங்கேற்பாளர்களை ஆதரிக்க குறிப்பிட்ட மொழி தெரிந்த மொழிபெயர்ப்பாளர்கள் இருப்பார்கள். இதை எழுதும்போது, ROV அக்டோபர் 2019 முதல் கொரிய அமெரிக்க சமூக சேவைகளுடன் இருமொழி வாக்காளர் கல்வி கருத்தரங்குககளை நடத்த திட்டமிட்டுள்ளது, மற்றும் தற்போது சீன, ஸ்பானிஷ், டகலாக், வியட்நாமிய, இந்தி, கெமர் மற்றும் ஜப்பானிய மொழி சமூகங்களுடன் கருத்தரங்குகளைத் திட்டமிடும் பணியில் ஈடுபட்டுள்ளது.

# மொழி சிறுபான்மை சமூகங்களை குறிவைக்க ஊடகங்களின் பயன்பாடு

பல்வேறு மொழி சிறுபான்மையினருக்கு வாக்கு மைய மாதிரி மற்றும் அஞ்சல்-மூலம் வாக்களிப்பு பற்றிய தகவல்களும் வழங்கப்படும், அத்துடன் வாக்காளர் பதிவாளர் அலுவலகத்தின் கட்டணமில்லா ஹாட்லைன் (408) 299-VOTE மற்றும் (408) 299-VOTE இல் பொது வாக்காளர் தகவல்கள வழங்கப்படும் கூட்டாட்சியில் கட்டாயப்படுத்தப்பட்ட அனைத்து மொழிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி, ஏராளமான மொழி சார்ந்த ஊடகங்களின் உதவியும் பயன்படுத்தப்படும். ஊடகங்களில் பின்வருவன அடங்கும், ஆனால் அவற்றுடன் மட்டும் மட்டுப்படுத்தப்படவில்லை:

1. உள்ளூர் தொலைக்காட்சி மற்றும் சமூக கேபிள் நிலையங்கள்
   a. Univision (ஸ்பானிஷ்)
   b. Epoch Times (சீன)
   c. Telemundo (ஸ்பானிஷ்)
   d. Namaste (இந்தி)
   e. Crossing TV (ஆங்கிலம் + கூடுதலாக எல்லா 8 மொழிகளும் )
2. செய்தித்தாள்கள் (பிராந்திய மற்றும் சமூகம்)
   a. El Observador (ஸ்பானிஷ்)
   b. Epoch Times (சீன)
   c. India West (English)
   d. Korea Times (கொரிய)
   e. Nichi Bei Weekly (ஜப்பானிய)
   f. Philippine News (டகலாக்)
   g. Viet Nam Daily (வியட்நாமிய)
   h. World Journal (சீன)
   i. N & R (English)
   j. China Press (சீன)
   k. JWeekly (ஜப்பானிய)
   l. Spotlight (English)
   m. Bayspo Magazine (ஜப்பானிய)
   n. Daily Post (English)
   o. India Currents (இந்தி)
3. வானொலி
   a. Univision (ஸ்பானிஷ்)
   b. Celina Rodriquez (ஸ்பானிஷ்)
   c. Sound of Hope (சீன)
   d. Sing Tao (சீன)
   e. Vien Thao (வியட்நாமிய)
   f. China Press (சீன)
   g. Radio Zindagi (இந்தி)
4. சமூக ஊடகங்கள் மற்றும் துறையின் வலைத்தளம்
   a. ROV Facebook பக்கம்: https://www.facebook.com/sccvote
   b. கவுண்ட்டி Facebook பக்கம்: https://www.facebook.com/county.of.santa.clara
   c. ROV Twitter: https://twitter.com/sccvote
   d. கவுண்ட்டி Twitter: https://twitter.com/SCCgov
   e. ROV Instagram: www.instagram.com/sccvote

    f. Nextdoor பயன்பாடு: (Santa Clara கவுண்ட்டியின் தகவல்தொடர்பு மற்றும் ஊடகத்தை தேடவும்)
    g. கவுண்ட்டி செய்திமடல் சந்தா பட்டியல்கள்
    h. ROV Youtube: https://www.youtube.com/sccvote
    i. ROV வலைத்தளம்: https://www.sccvote.org
5. மொழி சிறுபான்மை சமூக செய்திமடல்கள்
6. சிறுபான்மை மொழி சமூகங்களில் உள்ள வாக்காளர்களுக்கு வரவிருக்கும் தேர்தல் மற்றும் கட்டணமில்லா உதவி ஹாட்லைன் பற்றி தெரிவிக்க பொது சேவை அறிவிப்புகள் (PSAகள்) பயன்படுத்தப்படும். சிறுபான்மை மொழி தொலைக்காட்சி, வானொலி, செய்தித்தாள்கள் மற்றும் ஆன்லைன் ஆதாரங்கள் மூலம் PSAக்கள் விநியோகிக்கப்படும்.

மொழி சிறுபான்மை சமூகங்களை சென்றடைவதற்கான பிற வாய்ப்புகளில், திட்டமிட்ட ஓபன் ஹவுஸ் போன்ற ஊடக தகவல் அமர்வுகளில் வாக்கு மையங்களில் வைக்கப்படும் புதிய வாக்களிப்பு முறையை ROV விளக்கி காட்டும் போது, அதற்காக இருமொழி ஊழியர்களை பயன்படுத்துவதும் அடங்கும்,

## தேர்தல் அதிகாரிகள்

வாக்கு மைய ஊழியர்களின் கூட்டமைவை தீர்மானிக்க, ROV தேர்தல் அதிகாரிகளை நியமிப்பார்கள் (தேர்தல் குறியீட்டில் தேர்தல் வாரியங்கள் என குறிப்பிடப்படுகிறது)[22] வாக்கு மையத்தின் அளவு மற்றும் தேர்தல் தேதிக்கு அருகாமையின் அடிப்படையில் வாக்கு மையங்களுக்கான ஊழியர்கள் நியமிக்கப்படுவார்கள். ஒவ்வொரு வாக்கு மையத்திலும் ஆறு (6) முதல் பதினைந்து (15) தேர்தல் அதிகாரிகளை நியமிப்பதே திட்டம். தேர்தல் தேதி நெருங்கும் போது அதிக ஊழியர்கள் பெரிய வாக்கு மையங்களில், பரபரப்பான நேரங்களிலும் நாட்களிலும் ஈடுபடுத்தப்படுவார்கள். தேர்தல் தேதிக்கு 10 நாட்கள் முன்பு துவங்கி தேர்தல் தேதிக்கு முன்பு 4 நாட்கள் வரை வாக்கு மையங்களில் குறைந்தபட்சம் 6 ஊழியர்கள் இருப்பார்கள். தேர்தல் தேதிக்கு 3 நாட்கள் முன்பு துவங்கி தேர்தல் தேதி வரை வாக்கு மையங்களில் குறைந்தபட்சம் 11 ஊழியர்கள் இருப்பார்கள். தேர்தல் தேதியன்று, ஒவ்வொரு வாக்கு மையத்திலும் குறைந்தபட்சம் 15 ஊழியர்கள் இருப்பார்கள்.

ஒரு மொழிக்கு குறைந்தபட்சம் ஒரு தேர்தல் அதிகாரி இருக்க வேண்டும், அல்லது குறைந்தபட்சம், அந்த வாக்கு மையம் உள்ள பகுதியின் மிக பொதுவான மொழிகளுக்கு ஒரு தேர்தல் அதிகாரி இருக்க வேண்டும். என்ற திட்டமும் உள்ளது, வாக்காளர்களை செயல்படுத்துவதற்குத் தேவையான திறன்களை அதிகரிக்க, முடிந்தவரை, பல்வேறு சமூகங்களைச் சேர்ந்த வாக்கு மைய ஊழியர்களை ROV பணியமர்த்துவார்கள், அதே நேரத்தில் அவர்களுக்கு வாக்காளர்களுக்கு மொழிபெயர்ப்பாளராக செயல்படவும் சான்றிதழ் வழங்கப்படும். முன்னாள் இருமொழித் தேர்தல் அதிகாரிகளைத் தொடர்புகொள்வதோடு சேர்த்து, வழக்கமான திறந்த-ஆட்சேர்ப்பு விண்ணப்ப செயல்முறை மூலம் ஆட்சேர்ப்பு தொடங்கும்.

[22] தேர்தல் குறியீடு, பிரிவு 12, அத்தியாயம் 4 இன் சட்டப்பகுதி 1

# பிரிவு 3: வாக்காளர் தொடர்பு - மாற்றுத்திறனாளிகளாக உள்ள வாக்காளர்கள்

புதிய தேர்தல் மாதிரி அவர்களுக்கு சிறந்த சேவையை வழங்கக்கூடிய வழிகளில், மூத்தவர்கள் அல்லது மாற்றுத்திறனாளிகளாக உள்ள வாக்காளர்கள் போன்ற அணுகல் கவலைகள் உள்ள வாக்காளர்களிடமிருந்து உள்ளீட்டைப் பெற வாக்காளர் பதிவாளர் (ROV) 2019 ஜூன் 7 அன்று ஒரு வாக்களிப்பு அணுகல் ஆலோசனைக் கமிட்டியை (VAAC) நிறுவினார். இந்த கமிட்டி வாக்கு மைய இடங்கள் போன்ற பல்வேறு அம்சங்கள் குறித்தும், வழங்கப்படும் அல்லது வழங்கப்பட வேண்டிய அம்சங்கள் மற்றும் சேவைகள் குறித்தும் கருத்துக்களை வழங்கும். இந்த கமிட்டி 2020 தேர்தல் சுழற்சிகள் முழுவதிலும் சமூகத்தின் உள்ளீட்டை கேட்கும் ஒரு வழிமுறையாக அமலில் இருக்கும்.

## மாற்றுத்திறனாளிகளாக உள்ள வாக்காளர்களின் தேவைகளை அடையாளம் காண பயன்படுத்தப்படும் முறைகள்

மாற்றுத்திறனாளிகளாக உள்ள வாக்காளர்களின் தேவைகள் தீர்க்கப்படும் விதங்களை ROV தொடர்ந்து மேம்படுத்தி வருகிறது. அவ்வாறு செய்ய, நான்கு (4) முதன்மை ஆதாரங்களில் இருந்து மாற்றுத்திறனாளிகளாக உள்ள வாக்காளர்கள் தொடர்பான பரிந்துரைகளை ROV பகுப்பாய்வு செய்கிறது:
(1) மாற்றுத்திறனாளிகளாக உள்ள குடிமக்கள், (2) மாற்றுத்திறனாளிகளாக உள்ள வாக்காளர்களுக்கு ஆதரவான சேவைகளை வழங்கும் CBOக்கள், (3) VCA ஐ செயல்படுத்தும் பிற கவுண்ட்டிகள், மற்றும் (4) மாநில செயலாளர் அலுவலகம். வாக்களிப்பு நடத்தப்படும் விதத்தில் VCA முற்றிலும் புதிய அத்தியாயமாக மாறுவதால், மாற்றுத்திறனாளிகளாக உள்ள வாக்காளர்களுடன் (மற்றும் அவர்களுக்கு ஆதரவளிக்கும் CBOக்களுடன்) உறவுகளை வளர்ப்பதில் ஒரு புதிய கட்டத்தைத் தொடங்க ROV இந்த வாய்ப்பையும் பயன்படுத்துகிறது.

மாற்றுத்திறனாளி உரிமைகள் California மற்றும் Silicon Valley இன்டிபென்டன்ட் லிவிங் சென்டர் ஆகியவை மாற்றுத்திறனாளிகளாக உள்ள வாக்காளர்களின் தேவைகள் குறித்து நேரடியாக ROV ஐ அணுகிய இரண்டு அமைப்புகளாகும். அந்த ஆரம்ப ஈடுபாட்டிலிருந்தே, ROV தொடர்ந்து பின்வரும் நிறுவனங்களுடன் உறவுகளை வளர்த்து வருகிறது:

- பார்வையற்றோர் மற்றும் பார்வை குறைபாடுள்ளவர்களுக்கான Vista Center
- வளர்ச்சி குறைபாடுகள் குறித்த மாநில கவுன்சில் - மத்திய கடற்கரை அலுவலகம்
- Handicapables
- Santa Clara Valley பார்வையற்றவர் மையம்
- San Andreas பிராந்திய மையம்

இந்த புதிய கட்டம் மாற்றுத்திறனாளிகளாக உள்ள வாக்காளர்களிடமிருந்து நேரடியாக உள்ளீடை பெறுவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. வாக்காளர்களிடமிருந்து நேரடியாக வரும் அனைத்து பரிந்துரைகளையும் மதிப்பீடு செய்ய/ ஆராய்வதற்கு ROV உறுதியாக / திறந்த மனப்பான்மையுடன் தயாராக இருக்கிறது.

## மாற்றுத்திறனாளிகளின் சமூகத்தை சென்றடைதல்

பொது ஊடக பிரச்சாரத்துடன் கூடுதலாக, அணுகல் தேவைகளைக் கொண்ட வாக்காளர்களுக்கு தகவல்களை வழங்குவதிலும் ROV கவனம் செலுத்தும். ஒவ்வொரு வாக்கு மையத்திலும் குறைந்தபட்சம் மூன்று அணுகக்கூடிய வாக்களிக்கும் சாதனங்கள் கிடைப்பது பற்றிய தகவல்களும், தொலைநிலையிலிருந்து அணுகக்கூடிய அஞ்சல்-மூலம் வாக்களிப்பு (RAVBM) முறையைப் பயன்படுத்தக் கோருவதற்கான விருப்பமும் இதில் அடங்கும். RAVBM அமைப்பு மாற்றுத்திறனாளிகளாக உள்ள பதிவுப்பெற்ற வாக்காளர்கள், அத்துடன் ராணுவத்தினர் மற்றும் கடல்கடந்து வாழும் வாக்காளர்கள் மட்டுமே பயன்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ளது.[23]

தகவல் பரவலுக்கான பிற வாய்ப்புகள் பின்வருமாறு:

1. Silicon Valley Independent Living Center, Silicon Valley Council of the Blind, Santa Clara Valley Blind Center Incorporated, மற்றும் Greater Opportunities போன்றவை மூத்தவர்களுக்கு சேவைகள் மற்றும் ஆதரவை வழங்கும் நிறுவனங்கள்
2. நாடு முழுவதும் உள்ள சமூக கூட்டாண்மைகள், நகரங்கள், சிறப்பு மாவட்டங்கள், பள்ளி மாவட்டங்கள், நம்பிக்கை- சார்ந்த அமைப்புகள் மற்றும் பொது தகவல் அதிகாரிகள்
3. ஒரு “ஓபன் ஹவுஸ்” பொது செயல்முறை விளக்கத்தில் முன்னிலைப்படுத்தப்படும் அணுகல் விருப்பங்கள் மற்றும் ஒரு போலி வாக்கு மையத்தில் அனுபவம் பெறுவதற்கான எந்த ஊடக வாய்ப்புகளும்
4. வாக்கு மையங்களில் உள்ள அணுகல் விருப்பத்தை முன்னிலைப்படுத்தும் வானொலி மற்றும் தொலைக்காட்சியின் பொது சேவை அறிவிப்புகள்
5. பொது சேவை அறிவிப்புகள் வாக்கு மையங்களில் உள்ள அணுகல் விருப்பங்களை முன்னிலைப்படுத்தவும், தொலைநிலையிலிருந்து அணுகக்கூடிய அஞ்சல்-மூலம் வாக்களிப்பு முறை கிடைப்பதையும் முன்னிலைப்படுத்தவும் பயன்படுத்தப்படும்.

## மாற்றுத்திறனாளிகளாக உள்ள வாக்காளர்களுக்கான சேவைகள்

அனைத்து வாக்கு மையங்களும் மாற்றுத்திறனாளிகளாக உள்ள அமெரிக்கர்களுக்கான சட்டத்திற்கு (ADA) இணங்க வேண்டும். தேவைப்படும்போது, அனைத்து வாக்காளர்களுக்கும் முறையான அணுகலை உறுதிசெய்ய கிடைக்கக்கூடிய பிற கதவுகள் மற்றும் நுழைவு வழிகளும் திறக்கப்படும். கூடுதலாக, அளவைப் பொறுத்து, வாக்கு மையங்களில் மூன்று முதல் ஆறு வாக்களிப்பு சாதனங்கள் பொருத்தப்படும், அவை வாக்குச்சீட்டு குறிக்கும் சாதனங்கள் (BMD) என்றும் அழைக்கப்படுகின்றன, அவற்றில் மாற்றுத்திறனாளி வாக்காளர்களை சுயாதீனமாக மற்றும் தனிமையில் வாக்களிக்க அனுமதிக்கின்ற ADA க்கு இணக்கமான அம்சங்கள் உள்ளன. தங்கள் வீட்டிலிருந்தே வசதியாக வாக்களிக்க விரும்பும் வாக்காளர்களுக்கு, RAVBM முறைக்காக விண்ணப்பித்து மற்றும் அதை அணுகும் விருப்பமும் உள்ளது. RAVBM இல், அந்த வாக்காளர்களுக்கு அவர்களின் அதிகாரப்பூர்வ வாக்குச்சீட்டை பதிவிறக்கம் செய்வதற்கான இணையை கொண்ட மின்னஞ்சல் அனுப்பப்படும்,

[23] California தேர்தல் குறியீடு §303.3 ஐ பார்க்கவும்

அதோடு வாக்குச்சீட்டை பூர்த்தி செய்து ROV க்கு திருப்பி அனுப்புவதற்கான அறிவுறுத்தல்களும் அனுப்பப்படும் மாற்றுத்திறனாளிகளாக உள்ள வாக்காளர்கள் பொது வாக்காளர் தகவல்களை பெற, (408) 299-VOTE ஐ தவிர ROV இன் கட்டணமில்லா ஹாட்லைன் (866) 430-VOTE இலும் உதவியை நாடலாம். இரண்டு எண்ணிலுமே மொழி உதவி வழங்கப்படுகிறது.

## மாற்றுத்திறனாளி சமூகத்திற்கான வாக்காளர் கல்வி கருத்தரங்கு

மூத்தவர்களாக மற்றும் மாற்றுத்திறனாளிகளாக உள்ள வாக்காளர்களுக்கு கிடைக்கின்ற அணுகல் விருப்பங்கள் மற்றும் வாக்கு மைய செயல்முறை குறித்த தகவல்களை வழங்க, ROV வாக்காளர் கல்வி கருத்தரங்குகளை நடத்தும். இந்த கருத்தரங்குகளில் வாக்கு மைய மாதிரி பற்றிய கல்வி, புதிய வாக்களிப்பு உபகரணத்தின் செயல்முறை விளக்கங்கள், வாக்களிப்பு கருவிகளை அணுகும் முறை, வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸ் தகவல், மற்றும் மின்னணு முறையில் அணுகக்கூடிய அஞ்சல்-மூலம் வாக்களிப்பு வாக்குச்சீட்டைப் பெறுவதற்கான விருப்பங்கள் ஆகியவை விளக்கப்படும். கருத்தரங்கு நடைபெறும் இடங்கள் மற்றும் தேதிகளைத் தேர்ந்தெடுக்க வாக்களிப்பு அணுகல் ஆலோசனைக் கமிட்டி (VAAC) உறுப்பினர்களிடமிருந்து கிடைத்த உள்ளீட்டை ROV பயன்படுத்தும். சமீபத்தில், பார்வையற்றோர் மற்றும் பார்வை குறைபாடுள்ளவர்களுக்கான Vista Center உடன் ROV ஒரு கருத்தரங்கை நடத்தியது, மற்றும் இதை எழுதும் போது, தற்போது Silicon Valley இன்டிபென்டன்ட் லிவிங் சென்டர்,San Andreas பிராந்திய மையம் மற்றும் வளர்ச்சி மாற்றுத்திறனாளிகளுக்கான மாநில கவுன்சில் ஆகியவற்றுடன் கருத்தரங்குகளைத் திட்டமிடும் பணியில் ஈடுபட்டுள்ளது.

## மாற்றுத்திறனாளிகளாக உள்ள வாக்காளர்களுக்கு கல்வி கற்பிப்பதில் பயன்படுத்தப்படும் வரைவு பொருட்கள்

ROV தகவல்களை பரப்ப பயன்படும் ஆடியோ, காட்சி மற்றும் எழுதப்பட்ட பொருட்களை உருவாக்குகிறது ; VAAC கூட்டங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட தகவல்கள் இந்த பொருட்களை மேம்படுத்தும் பணியில் முழுவதும் பயன்படுத்தப்படும். இந்த பொருட்கள் ROV வலைத்தளத்தில் வளங்களாகவும் கிடைக்கும்.

VCA ஐ பரப்புவதற்காக அல்லது கல்விக்காக பயன்படுத்தப்படும் எந்த வீடியோவும், மூடிய துணைத்தலைப்புகளுடன் கிடைக்கிறது. ROV வலைத்தளத்தில் வெளியிடப்பட்ட VCA விளம்பர வீடியோ மற்றும் ஆன்லைனில் ஒளிபரப்பு செய்யப்பட்ட (மற்றும் பதிவேற்றப்பட்ட) EAP இன் பொது விசாரணைகள் இதற்கான எடுத்துக்காட்டுகள். கூடுதலாக, VCA தகவல் ஃப்ளையரை பிரெயில் முறையில் புடையெழுத்தாக மாற்றுவதிலும் ROV ஈடுபடுகிறது.

## தேர்தல் அதிகாரிகள்

2020 முதன்மைத் தேர்தலுக்காக தயாராவதற்கு, தேர்தல் அதிகாரிகளுக்கான பயிற்சிப் பொருட்களை ROV உருவாக்கி வருகிறது. சில பயிற்சி பொருட்களில் மாற்றுத்திறனாளிகளாக உள்ள வாக்காளர்களை ஈடுபடுத்துவதற்கான கலாச்சார உணர்திறன் அம்சத்தின் மீது கவனம் செலுத்தப்படும். பிற பயிற்சி பொருட்கள்

மாற்றுத்திறனாளிகளாக உள்ள வாக்காளர்கள் அவர்களுடன் கொண்டு வரக்கூடிய மற்றும் வாக்கு மையங்களில் பயன்படுத்த வேண்டிய பல்வேறு கேட்கும் மற்றும்/அல்லது காட்சி உதவி சாதனங்களை இயக்க மற்றும் இணைக்க தேவையான தொழில்நுட்ப விஷயங்களில் தேர்தல் அதிகாரிகளுக்கு உதவும். தேர்தல் அதிகாரிகளுக்கான பயிற்சியில் மாற்றுத்திறனாளிகளாக உள்ள மற்றும் இல்லாத அனைத்து நபர்களுக்கும் சேவைகளை மரியாதையுடன் வழங்குவதை பற்றி புரிந்துகொள்ள ஒரு பன்முகத்தன்மை வீடியோ வழங்கப்படுகிறது. மற்ற பயிற்சியில் மாற்றுத்திறனாளி வாக்காளர்களுக்காக வாக்கு மையத்தை முறையாக அமைப்பது பற்றி இருக்கும். அனைத்து வாக்காளர்களின் பன்முகத்தன்மைக்கான உறுதிப்பாடாக ஒவ்வொரு வாக்காளரின் தனித்துவத்தையும் சரியாக கவனித்து மற்றும் மரியாதையாக நடத்துவோம் என்று அனைத்து தேர்தல் அதிகாரிகளும் உறுதிமொழி எடுக்கிறார்கள். அனைத்து வாக்காளர்களையும் வரவேற்று, மரியாதையுடன் நடத்தி, மற்றும் மதிப்பதாக தேர்தல் அதிகாரிகள் உறுதியளிக்கிறார்கள்.

# பிரிவு 4: வாக்கு மையம் மற்றும் வாக்குச்சீட்டை போடும் இடத்தின் தகவல்

## வாக்கு மைய இடங்கள்

California தேர்தல் குறியீட்டில் கவுண்ட்டிகள் இரண்டு முன்னதானப வாக்களிப்பு காலங்களுக்கு வாக்கு மையங்களை திறக்க தேவைப்படுகிறது தேர்தல் தேதிக்கு பத்து (10) நாட்கள் முன்பிலிருந்து, தேர்தல் தேதி உட்பட மொத்தம் பதினொரு (11) நாட்களுக்கு, வாக்கு மையங்கள் திறந்திருக்க வேண்டும். இந்த கணக்கீடு பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு 50,000 கவுண்ட்டி வாக்காளர்களுக்கும் ஒரு வாக்கு மையம் இருப்பதை அடிப்படையாகக் கொண்டது. இரண்டாவது முன்னதான வாக்களிப்பு காலத்திற்கு, வாக்கு மையங்கள் தேர்தல் தேதிக்கு மூன்று (3) நாட்களுக்கு முன்பிலிருந்து, தேர்தல் தேதி உட்பட மொத்தம் நான்கு (4) நாட்களுக்கு திறந்திருக்க வேண்டும். இந்த கணக்கீடு பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு 10,000 கவுண்ட்டி வாக்காளர்களுக்கும் ஒரு வாக்கு மையம் இருப்பதை அடிப்படையாகக் கொண்டது.

வாக்காளர் பதிவாளர் (ROV) தற்போது மொத்தம் நூற்றி பத்து (110) வாக்கு மைய இடங்களுக்காக, சுமார் இருபத்தி இரண்டு (22) வாக்கு மையங்களை பதினொரு (11) நாட்களுக்காக மற்றும் எண்பத்தெட்டு (88) வாக்கு மையங்களை நான்கு (4) நாட்களுக்காக திறந்திருக்கும் வகையில் பெறுவதை உறுதி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளார். ஒழுங்கற்ற கால அட்டவணைகளைக் கொண்ட தனிநபர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக சில வாக்கு மைய நேரங்கள் வேறுபடலாம் அல்லது இதற்கு தனிப்பட்ட இடங்கள் கிடைப்பதும் காரணமாக இருக்கலாம். வெளியீட்டு நேரத்தில், பல இடங்கள் கிடைப்பதாக உறுதிப்படுத்தியுள்ளன, ஆனால் பொது உள்ளீடு மற்றும் ROV முன்னுரிமைகள் பற்றிய பகுப்பாய்வு முடிந்ததும் வாக்கு மைய இடங்களின் தேர்வு இறுதி செய்யப்படும். மார்ச் 2020 அதிபர் முதன்மைத் தேர்தல்களுக்குள் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் கணிக்கப்பட்ட எண்ணிக்கையின் அடிப்படையில், 2020 அதிபர் முதன்மை மற்றும்

பொதுத் தேர்தல்களுக்காக ROV இல் குறைந்தபட்சம் 100 வாக்கு மையங்கள் இருக்க வேண்டும். கவுண்ட்டியின் தேவைகளை சிறப்பாக பூர்த்தி செய்ய, VCA ஆல் தேவைப்படுவதை விட 10 வாக்கு மையங்கள் அதிகமாக அதாவது சுமார் 110 வாக்கு மையங்களை வைத்திருக்குமாறு ROV முன்மொழிகிறது. வாக்கு மையங்களின் கூறுபாடு பின்வருமாறு:

| வாக்கு மையங்களின் மதிப்பிடப்பட்ட எண்ணிக்கை | | | |
|---|---|---|---|
| **எல்லை வகை** | **குறைந்தபட்ச தேவை[24]** | **முன்மொழியப்பட்ட[25] எண்ணிக்கை** | **இறுதி செய்யப்பட்ட எண்ணிக்கை[26]** |
| 11-நாள் வாக்கு மையங்கள் (பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு 50000 வாக்காளர்களுக்கும் 1) | 20 | 22 | TBD |
| 4-நாள் வாக்கு மையங்கள் (பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு 10000 வாக்காளர்களுக்கும் 1) | 80 | 88 | TBD |
| **மொத்தம்** | **100** | **110** | **TBD** |

சாத்தியமான வாக்கு மைய இடங்களை அடையாளம் காண உதவும் 50,000 மற்றும் 10,000-வாக்காளர் எல்லைகளைக் காட்டும் வரைபடங்கள் பிற்சேர்க்கை E இல் உள்ளது. முன்மொழியப்பட்ட வாக்கு மைய இடங்கள் மற்றும் மணிநேரங்களின் தற்போதைய பட்டியல் மற்றும் வரைபடத்திற்கு, பிற்சேர்க்கை F ஐப் பார்க்கவும்

## வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸ் இடங்கள்

மொத்தம் 91 வாக்குச்சீட்டை போடும் இடங்களை இயக்க வாக்காளர் பதிவாளர் (ROV) திட்டமிட்டுள்ளார். மார்ச் 2020 அதிபர் முதன்மைத் தேர்தல்களுக்குள் பதிவுசெய்யப்பட்ட வாக்காளர்களின் கணிக்கப்பட்ட எண்ணிக்கையின் அடிப்படையில், 2020 அதிபர் முதன்மை மற்றும் பொதுத் தேர்தல்களுக்காக ROV இல் குறைந்தபட்சம் 67 வாக்குச்சீட்டு போடும் இடங்கள் இருக்க வேண்டும். கவுண்ட்டியின் தேவைகளை சிறப்பாகச் பூர்த்தி செய்ய, முன்மொழியப்பட்ட எண்ணிக்கை கவுண்ட்டியில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் குறைந்தது ஒரு வாக்குச்சீட்டை போடும் இடமாவது இருப்பதை அடிப்படையாகக் கொண்டது.

---

[24] மார்ச் 2020 முதன்மைத் தேர்தலுக்குள் Santa Clara கவுண்ட்டியில் கணிக்கப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் குறைந்தபட்ச தேவையான வாக்கு மையங்கள் கணக்கிடப்பட்டுள்ளன.

[25] ROV ஆல் வடிவமைக்கப்பட்ட எல்லைகள் மதிப்பிடப்பட்ட மக்கள் தொகை எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டவை மற்றும் அவை வழிகாட்டுதல்களாக செயல்படுகின்றன. VCA நிர்ணயித்த எண்ணிக்கை வாக்காளர்கள் “50,000 வரை” இருந்தால் சேவையளிப்பதற்காக என கருதவேண்டும்; இதன் பொருள் ஒவ்வொரு எல்லையிலும் உள்ள வாக்காளர்களின் எண்ணிக்கையானது VCA ஆல் வரையறுக்கப்பட்ட மொத்த எண்ணிக்கையுடன் எப்போதும் ஒத்துப்போகாது.

[26] இந்த எண் வெளியீட்டு நேரத்தில் இறுதி செய்யப்பட்ட எண்ணிக்கையை பிரதிபலிக்கிறது.

முன்மொழியப்பட்ட வாக்குச்சீட்டை போடும் இடங்களின் தற்போதைய பட்டியல் மற்றும் வரைபடத்திற்கு, பிற்சேர்க்கை F ஐப் பார்க்கவும்

| வாக்குச்சீட்டை போடும் இடங்களின் மதிப்பிடப்பட்ட எண்ணிக்கை | | | |
|---|---|---|---|
| **எல்லை வகை** | **குறைந்தபட்ச தேவை** | **முன்மொழியப்பட்ட[27] எண்ணிக்கை** | **இறுதி செய்யப்பட்ட எண்ணிக்கை** |
| வாக்குச்சீட்டு டிராப்-பாக்ஸ் இடங்கள் (பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு 15000 வாக்காளர்களுக்கும் 1) | 67 | 91 | TBD |

## தடுப்பு நடவடிக்கைகள்

வாக்களிக்கும் பணியில் இடையூறு ஏற்படுவதைத் தடுக்க, தேர்தலுக்கு முன்னும் பின்னும், ROV பின்வரும் தடுப்பு பாதுகாப்பு நடவடிக்கைகளை தயாராக வைத்திருக்கும்:

| **தடுப்பு பாதுகாப்பு நடவடிக்கை** | **நோக்கம்** |
|---|---|
| நிலையான பாதுகாப்பு நடவடிக்கைகள் | தேர்தல் தொடர்பான பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்கான அணுகலை மட்டுப் படுத்துவதன் மூலம் எந்தவிதமான இடையூறு சாத்தியங்களையும் இறுதியாக தடுப்பது: |
| சேவையக மற்றும் பிணைய காப்பு | பிரதான சேவையகம் அல்லது பிணையம் செயல்படாத நிலை ஏற்பட்டால், தகவல் ஓட்டத்தில் இடையூறு ஏற்படுவதைத் தடுக்க: |
| மாற்றாக வழங்க வாக்குப்பதிவு தள உபகரணங்களின் தொகுப்பு | ஏதாவது உபகரணத்தை பயன்படுத்த முடியாத நிலையில் வாக்களிக்கும் செயல்பாட்டில் இடையூறு ஏற்படுவதைத் தடுக்க: |
| மாற்றாக வழங்க உபகரணங்கள் | ஏதாவது உபகரணம் காணாமல் போன நிலையில் வாக்களிக்கும் செயல்பாட்டில் இடையூறு ஏற்படுவதைத் தடுக்க: |
| மாற்றாக வழங்க வாக்களிப்பு சப்ளைகள் | ஏதாவது வாக்களிப்பு சப்ளைகளை பயன்படுத்த முடியாத அல்லது காணாமல் போன நிலையில் வாக்களிக்கும் செயல்பாட்டில் இடையூறு ஏற்படுவதைத் தடுக்க: |

[27] ROV ஆல் வடிவமைக்கப்பட்ட எல்லைகள் மதிப்பிடப்பட்ட மக்கள் தொகை எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டவை மற்றும் அவை வழிகாட்டுதல்களாக செயல்படுகின்றன. VCA நிர்ணயித்த எண்ணிக்கை “15,000 வரையிலான” வாக்காளர்களுக்கு சேவை செய்வதாகக் கருதப்பட வேண்டும்; அதாவது, ஒவ்வொரு எல்லையிலும் கணிக்கப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கையானது VCA ஆல் வரையறுக்கப்பட்ட மொத்த எண்ணிக்கையுடன் எப்போதும் ஒத்துப்போகாது.

| | |
|---|---|
| காத்திருப்பில் உள்ள வாக்கு மைய ஊழியர்கள் | வாக்கு மைய ஊழியர்கள் வராத போது, வாக்களிக்கும் செயல்பாட்டில் இடையூறு ஏற்படுவதைத் தடுக்க: |
| சந்தேகத்திற்குரிய நபர் அல்லது பொருள் இருந்தால் செய்யவேண்டிய நடைமுறைகள் | சந்தேகத்திற்குரிய நபர் அல்லது பொருள் காணப்பட்டால் வாக்களிக்கும் செயல்பாட்டில் இடையூறு ஏற்படுவதைத் தடுக்க: |
| கைமுறை அமைப்புகளை தயார் நிலையில் வைத்திருப்பது | ஏதாவது மின்னணு வாக்குப்பதிவு உபகரணங்களை பயன்படுத்த முடியாத நிலையில் வாக்களிக்கும் செயல்பாட்டில் இடையூறு ஏற்படுவதைத் தடுக்க: |

மேலே உள்ள ஒவ்வொரு தடுப்பு பாதுகாப்பு நடவடிக்கைகளின் விரிவான கூறுபாடிற்கு, பிற்சேர்க்கை N ஐப் பார்க்கவும்.

## தற்செயல் திட்டம்

ஒரு சுமூகமான தேர்தல் செயல்முறையை உறுதிப்படுத்த ROV அனைத்து நடவடிக்கைளையும் எடுக்கும், இருப்பினும், இடையூறு ஏற்பட்டால், செயல்முறையை தொடர ROV இல் தயார்நிலையில் குறிப்பிட்ட நடவடிக்கைகள் உள்ளன. ROV பல முக்கிய சாத்தியமான இடையூறுகளை அடையாளம் கண்டுள்ளது:

- தேர்தல் தகவல் மேலாண்மை அமைப்பின் செயலிழப்பு
- மின் தடை
- கொந்தளிப்பான வானிலை
- தீ அல்லது பிற பேரழிவு
- வாக்களிப்பு உபகரணத்தின் செயலிழப்பு
- பேலட் ஆன் டிமாண்டு உபகரணம் வேலை செய்வதை நிறுத்துகிறது
- இணைய இணைப்பில் தோல்வி
- வாக்கு மைய ஊழியர்கள் வரவில்லை
- பயன்படுத்த முடியாத வாக்கு மையம்

இந்த இடையூறுகள், ROV இன் தீர்வுகள் மற்றும் கூடுதல் ROV தற்செயல் நடவடிக்கைகளை பற்றிய கூறுபாடிற்கு பிற்சேர்க்கை O ஐப் பார்க்கவும்.

# பிரிவு 5: வாக்கு மையத்தில் வாக்குச்சீட்டு பாதுகாப்பு மற்றும் தனிமை திட்டங்கள்

## வாக்கு மைய வடிவமைப்பு மற்றும் தளவமைப்பு

நியமிக்கப்பட்ட தனிமையான வாக்களிப்பு பகுதிகளுக்கு போதுமான இடத்தை வழங்கி, அதே சமயத்தில் உகந்த ஓட்டத்தை உறுதிப்படுத்த சிறந்த வாக்கு மையத்தின் அளவு குறைந்தது 60’x60’ ஆக இருக்கவேண்டும். பொருத்தமான ஊழியர்களிடம் வாக்காளர்களை வழிநடத்தி அனுப்ப ஒரு ஒதுக்கப்பட்ட வரிசை அமைப்பு, புதிய மின்னணு வாக்கெடுப்பு புத்தகத்தில் வாக்காளர்களை செயல்படுத்த ஒரு உள்-நுழைவு அட்டவணை, வாக்குச்சீட்டுகள் அச்சிடப்படும் பேலட் ஆன் டிமாண்ட் அச்சுப்பொறி பகுதி மற்றும் வாக்குச் சாவடிகள் மற்றும்

வாக்குச்சீட்டை குறிக்கும் சாதனப் பகுதிகள் ஆகியவை இருக்கும். வழிகாட்டியாகப் பயன்படுத்தப்படுவதற்கு பிற்சேர்க்கை P பொதுவான தளவமைப்பு வடிவமைப்பைக் காட்டுகிறது, ஆனால் ஒவ்வொரு வாக்கு மையத்திலும் தனிப்பயனாக்கப்பட்ட தளவமைப்பு இருப்பது சாத்தியம்.

## வாக்களிப்பில் பாதுகாப்பு

வாக்காளர் தரவின் ரகசியத்தன்மை, ஒருங்கமைவு மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. அனைத்து கவுண்ட்டி வாக்காளர் தரவுகளும் தரவைப் பாதுகாப்பதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள தரவுத்தளங்கள் மற்றும் சேவையகங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பயன்படுத்தி சேமிக்கப்படுகின்றன, அதே நேரத்தில் கவுண்ட்டி ஊழியர்களுக்கு பயன்படுத்தவும் கிடைக்கிற மாதிரி வைக்கப்பட்டுள்ளன.

வாக்காளரின் பிரதான பதிவாளர் (ROV) அலுவலகத்தில், வாக்களிக்கும் முறை ஏர்-கேப் செய்யப்படும் அதாவது வெளி பிணையத்தால் அணுகமுடியாது இருக்கும். வாக்களிப்பு அமைப்பை, அதை வைத்துள்ள சேவையக அறைக்குள் நுழைந்தால் மட்டுமே அணுக முடியும். கணினி பாதுகாப்பை பொறுத்தவரை, டெஸ்க்டாப் கம்ப்யூட்டர்களை பாதுகாப்பாக மூட நேரமில்லை என்றால், ஊழியர்கள் Ctrl+Alt+Delete ஐப் பயன்படுத்தி கணினியை பூட்டிவிட வேண்டும். இதற்கு காரணம், பவர் பொத்தானை ஒரு முறை அழுத்துவது மட்டும் இணைப்பை துண்டித்து முழுமையாக மூட போதுமானதாக இருக்காது. மின்சாரம் இல்லையென்றால், கணினிகளைக் கையாளும் சிறந்த வழி தெரிவதற்காக, உதவி மையத்தின் வழிகாட்டுதலுக்காக ஊழியர்கள் காத்திருக்க வேண்டும்.

வாக்கு மையங்களில், எந்த வாக்கு மையத்திற்கும் வாக்காளர் வரலாம் என்பதால், அனைத்து வாக்காளர்களின் பதிவு தரவு மற்றும் வாக்காளர் வரலாற்றின் நிகழ்நேர தகவலின் அணுகல் ஊழியர்களுக்கு கிடைக்கும். வாக்கு மையங்களில் கிடைக்கும் எந்த வாக்காளர் தரவும் மற்றும் வாக்கு மையங்கள் மற்றும் கவுண்ட்டி தரவு சேவையகங்களுக்கு இடையில் அனுப்பப்படும் எந்த தரவும் சமீபத்திய குறியாக்க தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி குறியாக்கம் செய்யப்படும். வாக்கு மையங்களில் குறிப்பிட்ட தேர்தல் சாதனங்கள் மற்றும் உபகரணங்களில் மட்டுமே வாக்காளர் தரவை அணுக அனுமதிக்கப்படும், மேலும் போக்குவரத்திலும், ஓய்வு நிலையிலும் தரவு குறியாக்கம் செய்யப்படும். வழக்கமாக தரவு காப்புப்பிரதிகள் எடுக்கப்படும், அத்துடன் வெளிப்படைத்தன்மை மற்றும் பாதுகாப்பை உறுதிப்படுத்த உதவும் பயனர் தொடர்பு மற்றும் செயல்முறைகளின் விரிவான தணிக்கைச் சுவடுகளும் பின்பற்றப்படும்.

வாக்கு மையங்களில் நிறைவு செய்யப்பட்ட வாக்குகள் எந்தவொரு பிணையத்துடனும் இணைக்கப்படாத வாக்குச் சீட்டு இயந்திரங்களைப் பயன்படுத்தி தளத்தில் ஸ்கேன் செய்யப்பட்டு ஒத்திசைக்கப்படும். வாக்குச்சீட்டு தரவு குறியாக்கம் செய்யப்பட்டு ஒரு கார்ட்ரிட்ஜில் சேமிக்கப்படும், அதை இயந்திரத்திலிருந்து உடல் ரீதியாக அகற்றினால் மட்டுமே அணுக முடியும். தேர்தல் தேதியன்று இரவு 8:00 மணிக்கு வாக்களிப்பு முடிந்ததும், ஒவ்வொரு வாக்குச் சீட்டை ஒத்திசைக்கும் இயந்திரங்களிலிருந்து கார்ட்ரிட்ஜுகளை பதிவு செய்வதற்காக மீண்டும் ROV இன் பிரதான அலுவலகத்திற்கு கொண்டு செல்லப்படும்.

பெறப்பட்ட அஞ்சல்-மூலம் வாக்களிப்பு (VBM) வாக்குச்சீட்டுகள் ROV இன் பிரதான அலுவலகத்தில் சேகரிக்கப்பட்டு எண்ணப்படும் வரை பாதுகாப்பான வாக்குச்சீட்டு அறையில் சேமிக்கப்படும். வாக்குச்சீட்டுகளை எண்ணுவதற்கு முன், ஒவ்வொரு வாக்குச்சீட்டும் பதிவு செய்யப்பட்ட வாக்காளரிடமிருந்து வந்ததை உறுதிப்படுத்த VBM வாக்குச்சீட்டு உறைகளில் உள்ள கையெழுத்துகள் சரிபார்க்கப்படுகின்றன. கையெழுத்துகள் சரிபார்க்கப்பட்ட பின்னர், வாக்குச்சீட்டுகள் பிரித்தெடுக்கப்பட்டு தொகுதி வாரியாக வரிசைப்படுத்தப்பட்டு எண்ணுவதற்காக சமர்ப்பிக்கப்படுகின்றன. வாக்குச்சீட்டுகள் எண்ணப்பட்ட பிறகு, தொகுதி வாரியாக, அவை தனி பாதுகாப்பான இடத்தில் சேமிக்கப்படும்.

ஊழியர்கள் கட்டிடத்திலிருந்து வாக்குச்சீட்டுகளை அகற்ற தேவைப்படும் அவசரநிலை ஏற்பட்டால், ஊழியர்கள் பெட்டிகளை அல்லது தொட்டிகளை டேப் மூலம் கட்டி புதிய இடத்திற்கு இடமாற்றி விட வேண்டும். அவற்றை கட்டிடத்திலிருந்து இடமாற்ற முடியாவிட்டால், பாதுகாப்பான அறைகளில் ஒன்றில் வாக்குச்சீட்டுகள் வைக்கப்படும். அகற்றுவதற்கு நேரமில்லை என்றால், வெற்றாக உள்ள, வழங்கப்படாத வாக்குச்சீட்டுகளை விட்டுவிட வேண்டும். நேரம் இருந்தால், வெற்றாக உள்ள, வழங்கப்படாத வாக்குச்சீட்டுகளை என்ன செய்யவேண்டும் என்று ROV அல்லது நியமிக்கப்பட்டவர் ஊழியர்களுக்கு அறிவுறுத்துவார்.

## பிரிவு 6 - வரவு செலவுத் திட்டம்

வாக்காளர் பதிவாளர் (ROV) ஒரு வரவு செலவுத் திட்டத்தையும், வாக்கு மைய மாதிரி வாக்களிப்பு முறை குறித்து வாக்காளர்களுக்கு பரப்ப பெரிய விரிவான முறையை பயன்படுத்துவதற்கு தேவையான ஆதாரங்களுக்கான திட்டத்தையும் உருவாக்கியுள்ளார். வாக்குப்பதிவு இட மாதிரியின் கீழ் கடந்த இரண்டு தேர்தல் சுழற்சிகளுக்கு, Santa Clara கவுண்ட்டி விளம்பரங்களுடன் சேர்த்து வாக்காளர் கல்வி மற்றும் அவர்களை சென்றடைவதற்காக சராசரியாக சுமார் $163,000 செலவிட்டது. ஜூன் 2018 தேர்தலுக்காக ROV சுமார் $186,000 செலவிட்டது, அதே நேரத்தில் நவம்பர் 2018 தேர்தலுக்காக சுமார் $140,000 செலவிடப்பட்டது. ஜூன் தேர்தலுக்காக அதிக செலவு செய்யப்பட்டது, ஏனெனில் அந்த ஆண்டு ஜனவரியில், ஆண்டு முழுவதிற்கும் தேவையான அனைத்து பொருட்களும் வாங்கப்பட்டன. நவம்பர் தேர்தலுக்கான எந்த கூடுதல் பொருட்களும் தேவைக்கேற்ப வாங்கப்பட்டன. கூடுதலாக, ஜூன் தேர்தலுக்கான அவுட்ரீச் காலம் நவம்பர் தேர்தலில் ஜூன் முதல் நவம்பர் வரை இருந்த கால அளவை விட அதிகமானதாக இருந்தது பிற்சேர்க்கை Q ஜூன் 2018 மற்றும் நவம்பர் 2018 தேர்தல்களுக்கான நிகழ்வுகளின் கூறுபாடை வழங்குகிறது.

வாக்காளர் தேர்வுச் சட்டத்தின் (VCA) அமலாக்கத்தின் மூலம், 2020 ஆம் ஆண்டு மார்ச் மாதம் நடைபெற்ற அதிபர் முதன்மைத் தேர்தலுக்கான வரவு செலவுத் திட்டம் மற்றும் விளம்பரங்களுக்கான வரவு செலவுத் திட்டம் கிட்டத்தட்ட $3 மில்லியனாக அதிகரித்தது. கணிக்கப்பட்ட வரவுசெலவுத் திட்டத்தில் ஊழியர்கள் மற்றும் அவுட்ரீச் திட்டத்துடன் தொடர்புடைய பிற செலவுகள் இல்லை. VCA வரவு செலவுத் திட்டத்திற்கான கூறுபாடும் மற்றும் கடந்த இரண்டு தேர்தல்களுடன் செய்யப்பட்ட ஒப்பிடுதலும் கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது:

| செயல்பாடு | ஜூன் 2018 உண்மையான செலவுகள் (வாக்குப்பதிவு இட மாதிரி) | நவ 2018 உண்மையான செலவுகள் (வாக்குப்பதிவு இட மாதிரி) | மார்ச் 2020 வரவு செலவுத் திட்டம் (வாக்கு மைய மாதிரி) |
|---|---|---|---|
| **விளம்பரங்களுக்கு மொத்தம்** | **$165,521** | **$114,754** | **$1,048,900** |
| செய்தித்தாள் விளம்பரங்கள் / வானொலி ஸ்பாட்கள்/சமூக ஊடகங்கள்/அச்சு விளம்பரங்கள் | $165,521 | $114,754 | $418,900 |
| புதிய வானொலி ஸ்பாட்கள் | | | $210,000 |
| விளையாட்டு உரிமங்கள் | | | $420,000 |
| **அவுட்ரீச்சிற்காக மொத்தம்** | **$20,478** | **$25,359** | **$1,837,015** |
| அவுட்ரீச் சப்ளைகள் மற்றும் காட்சியகங்கள் | $3,758 | $3,281 | $97,547 |
| அவுட்ரீச் நிகழ்வுகளில் வழங்கப்பட்டவை (இலவச பொருட்கள்) | $11,611 | $12,436 | $162,513 |
| CBO விநியோகத்திற்கான அவுட்ரீச்சில் வழங்கப்பட்டவை | | | $120,180 |
| அவுட்ரீச் உபகரணங்கள் | | | $20,550 |
| கவுண்ட்டி அச்சகம்/ அச்சிடப்பட்ட பொருட்களுக்கு | $5,109 | $9,643 | $100,000 |
| வாகன வாடகை மற்றும் எரிபொருள் | | | $16,225 |
| பதிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு வாக்காளருக்கும் 2 நேரடி அஞ்சல்கள் | | | $1,320,000 |

தற்போது மதிப்பிடப்பட்ட கணிக்கப்பட்ட குறுகிய கால சேமிப்பு எதுவும் இல்லை மற்றும் கணிக்கப்பட்ட நீண்ட கால சேமிப்பின் மதிப்பீடு இந்த நேரத்தில் தெரியவில்லை.